Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, OCTOBER 31, 2022

திங்கட்கிழமை ஒக்டோபர் 31, 2022 | ஒளி: 08 கதிர் 132 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



## சிரார்த்த தினம்

மலையகத்தின் மூத்த அரசியல் தலைவரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகருமான அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமானின் 23 ஆவது சிரார்த்த தினம் நேற்றாகும் (ஒக்டோபர் 30).


தொடர்ச்சி P2

சியோல் நகரின் குறுகிய தெருவில்

## சன நெரிசலில் சிக்கி 153 பேர் உயிரிழப்பு

### கண்டி இளைஞரும் பலியானார்





தென் கொரியாவின் தலைநகரான சியோலில் இடம்பெற்ற பெரும் ஹாலோவீன் கொண்டாட்டத்தின் போது, குறுகிய தெருவில் பலர் குவிந்ததால் ஏற்பட்ட சன நெரிசலில் சிக்கி குறைந்தது 153 பேர் உயிரிழந்துள்ளதாக தென் கொரிய அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர். கொரோனாவுக்குப் பின்னர், முகக் கவசம் இல்லாத ஹாலோவீன் கொண்டாட்டங்கள், இட்டாவோன் இரவு களியாட்ட பகுதியில் சனிக்கிழமை (29) இடம்பெற்ற போதே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## மனோ எனக்கு தந்தை; திகா எனது சகோதரன்

### 'தாயகம்' திறப்பு விழாவில் ஜீவன் தெரிவிப்பு



எஸ்.கணேசன்

"மலையக மறுமலர்ச்சிக்கு ஒன்றிணைந்த வேலைத்திட்டமே அவசியம். அதற்கான ஆரம்பமே இது. தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எனக்கு சிறந்த வழிகாட்டியாக உள்ளார். தந்தை ஸ்தானத்தில் இருந்து என்னை வழிநடத்துகின்றார். திகாம்பரம் எனது மூத்த சகோதரன் போன்றவர்" என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# சுமந்திரனுக்கு அடங்க மாட்டோம்

### சிறிதரனின் கருத்தை ஆதரிப்பதாக தவராசா அறிவிப்பு

### சுமந்திரன் முதுகெலும்பில்லாதவர் என்றும் தெரிவிப்பு

### தமிழரசுக் கட்சி என்பது தனியார் கம்பனியல்ல என்றும் சுட்டிக்காட்டுகிறார்



இனியும் சுமந்திரன் எடுக்கும் முடிவுகளுக்கு நாங்கள் கட்டுப்பட மாட்டோம் என்று பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கூறிய விடயத்தை நான் முற்று முழுதாக ஏற்கின்றேன்" என்று ஜனாதிபதி சட்டத்தரணியும் இலங்கை தமிழரசுக் கட்சியின் கொழும்பு கிளைக் தலைவருமான கே.வி.தவராசா, நேற்று (30) தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், "பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் கூறிய இந்த விடயத்தை 2010ஆம் ஆண்டு, நான் கட்சிக்குள் உள்வாங்கப்பட்டதில் இருந்து தொடர்ச்சியாக 12 ஆண்டுகளாக கூறிக்கொண்டு வருகிறேன்" என்றார்.

தொடர்ச்சி P2

## அத்தியாவசிய பொருள் விலைகள் குறைப்பு

### பாண் விலையும் குறையும்?



புறக்கோட்டை மொத்த சந்தையில் சீனி, பருப்பு மற்றும் கோதுமை மா ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக, அத்தியாவசிய உணவு பொருட்கள் இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

யால சரணாலய விவகாரம்

## அமைச்சர் அமரவீரவின் பெறாமகனும் கைது

யால தேசிய சரணாலயத்துக்குள், வனவிலங்கு சட்டத்தை மீறி வாகனங்களைச் செலுத்தி வன விலங்குகளை துன்புறுத்திய சம்பவம் தொடர்பில், வனஜீவராசிகள் அமைச்சர் மஹிந்த அமரவீரவின் பெறாமகன் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



## உழைப்பதற்கு வரவில்லை; ஆளவும் தான் வந்துள்ளோம்

### மலையம் எழுச்சி பெறுகிறது என்கிறார் மனோ எம்.பி

எஸ்.கணேசன்

" மலையகத் தமிழர்களின் எழுச்சி, வளர்ச்சியில் இரட்டை குழல் துப்பாக்கியாகச் செயற்படுவோம் என இ.தொ.காவுக்கு அழைப்பு விடுத்திருந்தேன். அது தற்போது சாத்தியப்பட்டுள்ளது" என்று தெரிவித்த தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், எம்.பியுமான மனோ கணேசன், "மலையகம் இன்று ஒளிர்கிறது, ஒரு சிங்கமாக, புலியாக எழுச்சி பெறுகின்றது. நாங்கள் உழைக்க மட்டும் இங்கு வரவில்லை, ஆளவும்தான் வந்துள்ளோம்" என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

மாத்தறை சூடு விவகாரம்

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை விசாரணை

மாத்தறை, திஹகொடவில் பாடசாலை மாணவர் ஒருவர் மீது பொலிஸாரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படும் என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. அதற்காக தமது அதிகார சபையுடன் இணைந்த பொலிஸ் அதிகாரிகளை ஈடுபடுத்தவுள்ளதாக அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதய குமார அமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

மலையகத் தமிழ் மக்களை

## சமூகத்துடன் இணைப்பது என்பதை கண்டறிய குழு



மலையகத் தமிழ் மக்களை இலங்கை சமூகத்துடன் மேலும் எவ்வாறு இணைப்பது தொடர்பில் ஆராய குழுவொன்று நியமிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். மலையகத்தை பூர்வீகமாக கொண்ட தமிழ் மக்களில் சிலர் இலங்கை சமூகத்துடன் வெற்றிகரமாக இணைந்துள்ளதாகவும், வேறு சிலர் அங்கு தோல்வியடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவர்களுக்கு ஆதரவாக செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## தேர்தலை ஒத்திவைக்க சூழ்ச்சி செய்கின்றனர்



தேர்தல் முறைமையை திருத்துவதற்காக தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்ற பிரேரணை தேர்தலை தாமதப்படுத்தும் மற்றொரு முயற்சி என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். இதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு ஏற்கெனவே தனது அறிக்கையை வழங்கியுள்ள நிலையில்,

தொடர்ச்சி P2

## தெரிவுக்குழுவை நியமிக்குமாறு நீதியமைச்சர் கடிதம்



தேர்தல் முறைமையை திருத்துவதற்காக பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று கோரி நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ, சபாநாயகருக்கு கடிதம் எழுதியுள்ளார். தேர்தல் முறைமையை மாற்றுவதற்கான 15 விடயங்கள் உள்ளடக்கிய குறித்த கடிதத்தில் தெரிவுக்குழுவின் தலைவராக சபாநாயகர் செயற்பட வேண்டும் எனவும் தெரிவுக்குழுவின் உறுப்பினர்கள் சபாநாயகரால் பெயரிடப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## நாளை முதல் உணவு விலைகள் குறையும்



தேநீர் மற்றும் மேலும் சில உணவு வகைகளின் விலைகளை, நாளை (01) முதல் 10 சதவீதத்தால் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார். இவ்வாறு குறைக்கப்படுவதற்கு, அத்தியாவசியப் பொருட்கள் குறைக்கப்பட்ட விலைகளுக்கே உணவக உரிமையாளர்களுக்கு கிடைக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## இலங்கையில் பூங்கா திறக்க டிஸ்னிக்கு திட்டம் இல்லை

இலங்கையில் வணிக நோக்கு பூங்காவைத் நிர்மாணிப்பதற்கான திட்டம் எதுவும் சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற வோல்ட் டிஸ்னி நிறுவனத்திடம் தற்போதைக்கு இல்லை என்று தி சண்டே டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. தெற்காசியாவின் முதலாவது டிஸ்னிலேண்ட் வணிக நோக்கு பூங்காவை ஹம்பாந்தோட்டையில் நிர்மாணிப்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு சுற்றுலா இராஜாங்க அமைச்சர் டயானா கமகே, அடுத்த மாதம் அமெரிக்கா செல்லவுள்ளார் என்று செய்தி வெளியாகியிருந்தது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சன நெரிசலில் சிக்கி 153 பேர்...

குறித்த சம்பவத்தில் குறைந்தது 82 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் இதுவரை 19 வெளிநாட்டவர்கள் உயிரிழந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, சியோலில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 27 வயதான கண்டியைச் சேர்ந்த ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்பதை வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது. வேறு யாராவது இலங்கையர்கள் இச்சம்பவத்தில் காயமடைந்தார்களா அல்லது உயிரிழந்தனரா என்பது குறித்த விவரங்களை தற்போது சரிபார்க்க முடியாதுள்ளதாகத் தெரிவித்துள்ள அமைச்சு, மேலதிக விவரங்களைப் பெற சியோலில் உள்ள இலங்கை தூதரகத்துடன் இணைந்து செயற்படுவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

# சிரார்த்த தினம்

இதனையொட்டி பல்வேறு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. பழைய பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள அன்னாரின் உருவ சிலைக்கு இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான்,பொது செயலாளர் ஜீவன் தொண்டமான்,தவிசாளர் மருதப்பாண்டி ராமேஸ்வரன் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் .

# சுமந்திரனுக்கு அடங்க மாட்டோம்

கட்சி என்று வருகையில், கட்சிக்குள் முடிவு எடுக்கும் போதும் அக்கட்சியில் உள்ள அனைவராலும் சேர்ந்து எடுக்கப்பட வேண்டும் என்றும் தலைவர் ஒரு முடிவை எடுத்தாலும், கட்சியில் உள்ளவர்கள் மத்தியிலும் கேட்கப்பட வேண்டும் அல்லது மத்திய குழுவில் உள்ள எம்.பிகள் குழுவாக இருந்த கூட அங்கேயும் ஒன்றிணைந்து முடிவெடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

அந்த முடிவு ஒரு குழுவான முடிவாக இருக்க வேண்டும் எனவும் தொடர்ச்சியாக நீண்ட காலமாக தான் இதை வலியுறுத்தி வருவதாகவும் தன்னிச்சியான முடிவுகள் தான் தமிழரசு கட்சி இந்த நிலைக்கு தள்ளப்பட்டு என்பதற்கு காரணம், என்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பற்றி நாம் பேசவில்லை என்றும் கூறினார்.

எந்த விடயத்தை எடுத்தாலும் தன்னிச்சையான முடிவை எடுப்பதை எப்போது நிறுத்துகிறார்களோ அப்பொழுதுதான் தமிழரசுக் கட்சி நிலைத்து நிற்கும் ஸ்ரீதரன் அவர்கள் கூறிய கருத்தினை ஏற்றுக் கொள்கின்றேன் என்றும் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்திலே ஆதரிப்பதா இல்லையா என்பதை முடிவினை எடுத்து அதில் பெரும்பாலும் எடுக்கும் முடிவுக்கு கட்டுப்பட வேண்டும் என்றும் ஆனால் பாராளுமன்ற குழுவில் அவ்வாறு முடிவு வரவில்லை என்றும் தெரிவித்தார்.

ஆனால் பாராளுமன்றத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் ஆதரிப்பதா, இல்லையா என்ற நிலைப்பாட்டில் இருந்து வாக்களிக்காமல் சுமந்திரன் வெளியேறு சென்று விட்டார் என்று குறிப்பிட்ட அவர், இதே சுமந்திரன், யாராவது வாக்களிக்காமல் செல்வார்களா இருந்தால், புறக்கணிப்பவர்களாக இருந்தால் அவர்கள் முதுகெலும்பு இல்லாதவர்கள் என்று கூறி இருந்தார் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

ஆனால், அன்றைய செயற்பாட்டை பார்க்கும்போது அப்படிக் கூறிய சுமந்திரன், எதிர்த்து வாக்களிக்கவும் இல்லை முதுகெலும்பில்லாதவர்போல செயல்பட்டு இருக்கின்றார் என்று தவராசா குறிப்பிட்டார்.

ஒரு கட்டுக்கோப்புக்காக ஒரு கட்சிக்குள்ளே ஒரு தலைமைத்துவத்தின் முடிவாக இருந்தால் கூட, அனைவரும் ஒருங்கிணைப்போடு எடுக்க வேண்டும் எனவும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள், மக்களுக்கு தமிழ் தேசிய அரசியலை கொண்டு நடத்த வேண்டும் என்பதை தொடர்ச்சியாக வற்புறுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

தேசிய அரசியலில் காட்டும் பங்கில், ஒரு பங்கை கூட தமிழ்த் தேசிய அரசியலை நடாத்துவதில் காட்டப்படுவதில்லை என்றும் இந்த விடயம் மாற்றம் அடையாவிட்டால், நிச்சயமாக எங்களுடைய தமிழரசுக் கட்சி வீழ்ச்சி பாதைக்கு போய்க்கொண்டிருக்கின்றது என்றும் குறிப்பிட்டார். இலங்கை தமிழரசுக் கட்சி என்பது தனியார் கம்பனியல்ல, மக்களின் கட்சி, மக்களின் உரிமை பெற்றெடுப்பதற்காக இந்த வீட்டுக்குள் வந்து குந்தியிருக்கின்றோம் தவிர இது எங்களுடைய வீடு என யாரும் மார்தட்ட முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து கடந்த 13 வருட காலத்தில் பலர் வெளியேறி பல கட்சிகள் உருவாக்கியுள்ளன என்றும் ஒரு தனி நபரின் பிழையான செயல்பாட்டினால் இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது என்றும் கூறினார்.

குறிப்பாக உயர் நீதியரசராக இருந்த சி.வி. விக்னேஸ்வரன் உட்பட பலர் சென்று இருக்கின்றார்கள் எனவும் ஒவ்வொரு தடவையும் ஒரு தனி மனிதனின் செயற்பாட்டால் பலர் கட்சியை விட்டு வெளியேறும் நிலைமை காணப்படுகின்றது என்றும் குறிப்பிட்டார்.

அதாவது தமிழ் தேசியம் தேய்ந்து கொண்டு செல்கின்றது என்று தெரிவித்த அவர், இந்த தமிழ் தேசியம் தொடர்ந்து தேய்ந்து கொண்டு செல்லும் போது, கட்சியிலிருந்து இராஜினாமா செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்றார்.

# மனோ எனக்கு...

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைமையக தாயகம் திறப்பு விழாவில் நேற்று (30) கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், “என்னை அன்புடன் வரவேற்ற சகோதர அரசியல் கட்சி மற்றும் தொழிற்சங்கங்களுக்கு நன்றிகள். நான் விருந்தாளி அல்ல. உங்களில் ஒருவன். நாம் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள்.

நான் இங்கு வந்தது குறித்து பலருக்கு பலவித உணர்வுகள் இருக்கலாம். ஆனால் எமது சமூகத்தை முன்னேற்றுவதற்கு ஒன்றிணைந்த வேலைத்திட்டம் அவசியம். அதற்கான ஆரம்பமே இது.

வெறுப்பையும் எதிர்ப்பையும் வைத்து அரசியல் செய்ய முடியாது. நீடிக்கவும் முடியாது என்பது எனது சிறிய அரசியல் வாழ்வில் நான் படித்த அனுபவம். அன்பாலும், ஒன்றிணைவாலுமே எல்லாம் சாத்தியப்படும்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எனக்கு சிறந்த வழிகாட்டி. தந்தை ஸ்தானத்தில் இருந்து என்னை வழிநடத்துகின்றார். திகாம்பரமும் எனது மூத்த சகோதரன் போன்றவர்” என்றார்.

# தெரிவுக்குழுவை நியமிக்குமாறு...

பாராளுமன்றத்துக்கு, மாகாண சபைகளுக்கு அல்லது உள்ளூராட்சி மன்றங்களுக்கு மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் போது பொருத்தமான தேர்தல் முறைமையைக் கண்டறிந்து அறிக்கையிடுவதற்கும், அதற்கு பொருத்தமான பரிந்துரைகளை முன்வைப்பதற்கும் பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிக்குமாறு அக்கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக பொருத்தமான முறைமை தொடர்பாக இரண்டு வாரத்துக்குள் பரிந்துரைப்பது சிறந்தது என்று சபாநாயகருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அமைச்சர் அமரவீரவின்...

சரணாலயத்துக்குள் சென்ற வாகனத்தில் பயணித்த சந்தேகநபர் வாகனத்தை செலுத்த வில்லை என்பது, சிசிடிவி காட்சிகள் மூலம் தெரியவந்துள்ளதுடன், அவர், அமைச்சர் மஹிந்த அமரவீரவின் சகோதரரின் மகனான துலித நுவான் அமரவீர என்பவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

திஸ்ஸமஹாராம நீதவான் தரிந்து சமிர சில்வா முன்னிலையில், சந்தேகநபரை நேற்று முன்தினம் (29) ஆஜர்படுத்திய போது, 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு உத்தரவிட்டார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர, இவ்விடயம் குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில், யால சரணாலய அதிகாரிகளிடம் கடந்த 26ஆம் திகதி சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்ட ஒன்பது பேரையும் தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு திஸ்ஸமஹாராம நீதவான் அன்றையதினம் உத்தரவிட்டிருந்தார்.

கடந்த 22ஆம் திகதி சனிக்கிழமை 33 ஜீப்களில் சுமார் 100 பேருடன் யால சரணாலயத்துக்குள் பிரவேசித்த குழுவினர், வாகனங்களில் வட்டமடித்தும் முறையற்ற விதத்தில் வாகனங்களை செலுத்தியும் வன விலங்குகளை துன்புறுத்தியிருந்தனர்.

இது தொடர்பில் 7 வாகனங்கள் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், 7 சாரதிகள் மற்றும் வீடியோ எடுத்த இருவர் அடங்கலாக 9 பேர் சரணடைந்திருந்தனர்.

யால சரணாலயத்தில் டிபெண்டர்கள், ஜீப்களில் அவர்கள் பயணித்த விதம் தொடர்பான பல காணொளிகள் சமூக ஊடகங்களில் வெளியானதையடுத்து வனஜீவராசிகள் திணைக்களத்தினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உழைப்பதற்கு வரவில்லை...

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைமையக திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மலையக மக்கள் உழைப்பாளர்களாக இலங்கைக்கு அடியெடுத்து வைத்து 2023 ஆம் ஆண்டுடன் இருநூறு வருடங்களாகின்றன. நாங்கள் இங்கு உழைப்பதற்கு மட்டும் வரவில்லை. ஆளவும்தான் வந்துள்ளோம். கண்டி இராஜ்ஜியத்தை கடைசியாக ஆண்ட மன்னன்கூட இந்தியா வம்சாவளி தமிழர்தான். எனவே, நாங்களும் ஆண்டபரம்பரைதான். இலங்கையில் இன்று ஒரு தேசிய இனமாக எழுச்சி பெற்றுள்ளோம்” என்று குறிப்பிட்டார்.

“மலையகத்தில் இருந்து வெளியே சென்று தொழில் செய்பவர்கள், தோட்டத் தொழிலாளர்களைத் தூக்கி விடுவதற்கு பங்களிப்பு செய்ய வேண்டும். அதற்கான கடப்பாடு அனைவருக்கும் உள்ளது. இலங்கை அரசாங்கமும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டத்தை சமூக வளர்ச்சிக்காக வகுக்க வேண்டும்” என்றும் மனோ எம்.பி தெரிவித்தார்.

”தேயிலை ஏற்றுமதிமூலம் சிறந்த வருமானம் கிடைக்கின்ற போதும் அவற்றை பகிர்ந்துக்கொள்வதற்கு தோட்ட நிறுவனங்கள் தயாரில்லை. எனவே, தொழிலாளர்களுடன் வருமானங்களை பகிர்ந்துகொள்ள தோட்ட நிறுவனங்கள் தாமாக முன்வர வேண்டும். இல்லையேல் தோட்ட நிறுவனங்களுக்கு மறக்க முடியாத

# அத்தியாவசிய பொருள்...

எதிர்வரும் பண்டிகை காலம் மற்றும் பல விடயங்களை கருத்திற் கொண்டே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சங்கம் அறிவித்துள்ளது.

290 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் சீனியின் மொத்த விலை 225 ரூபாயாகக் குறைந்துள்ளதுடன், 265 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட கோதுமை மாவின் மொத்த விலை 250 ரூபாயாக குறைந்துள்ளதாகவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

திறந்த கணக்குகள் மூலம் கோதுமை மா இறக்குமதியை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதி கிடைத்தவுடன் கோதுமை மா இறக்குமதியை அதிகரிக்க எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்ட சங்கம், அதிகளவான தொகை கோதுமை மா, இறக்குமதிக்காக முற்பதிவு செய்யப்பட்டுள்ளதாவும் சுட்டிக்காட்டியது.

இதேவேளை, கோதுமை மாவின் விலை 250 ரூபாயாக்கப்பட்டாலும் போதிய அளவில், மா இறக்குமதி செய்யப்பட்டாலும், அடுத்த வாரம் முதல் பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலை குறைக்கப்படும் என்றும்அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என். கே.ஜயவர்தன, அண்மையில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சமூகத்துடன்...

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வேண்டுகோளுக்கு இணங்க புதுச்சேரி யூனியன் பிரதேசம் மற்றும் இந்திய மக்களால் வழங்கப்பட்ட மருந்துப் பொருட்களை பொறுப்பேற்கும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று (30) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இணைந்துகொண்ட போதே இவ்வாறு தெரிவித்தார்.

23 வருடங்களுக்கு முன்னர் மறைந்த சௌமியமூர்த்தி தொண்டமானின் நினைவாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோர், இந்த மருந்துப் பொருட்களை ஜனாதிபதியிடம் உத்தியோகபூர்வமாக கையளித்ததுடன், ஜனாதிபதி, சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவிடம் குறித்த மருந்துப் பொருட்களை கையளித்தார்.

பெருந்தோட்ட வைத்தியசாலைகள் சுகாதார அமைச்சுக்குக் கீழ் கொண்டுவரும் அதேவேளை, தோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்தியை உறுதி செய்வதற்கு தாம் செயற்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய மக்களைப் போன்று மலையகத்தை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் மக்களும் தமது சொந்த வீட்டில் வசிக்கும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே அவர்களுக்கு காணிகளை வழங்குவதற்கும் மற்றும் அவற்றில் வீடுகளை அமைக்கும் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கும் அரசாங்கத்தின் ஆதரவு வழங்கப்படுவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

கல்வியை முடித்த பின்னர் இளைஞர்கள் தோட்டங்களை விட்டு வெளியேறும் போக்கு காணப்படுவதாகவும், அதன் காரணமாக ஆபத்தில் உள்ள பெருந்தோட்டப் பொருளாதாரத்தை மீட்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பெருந்தோட்ட இளைஞர்கள் மற்றும் நாட்டின் அனைத்து இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்புகளை உருவாக்க அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவித்தார்.

மலையக மக்களை வறுமையில் இருந்து விடுவித்து அவர்களை பொருளாதார ரீதியில் மேம்படுத்துவதற்காக, அங்கு வாழும் மக்களின் எதிர்காலம் மற்றும் பெருந்தோட்டப் பொருளாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் மேலும் கவனம் செலுத்த வேண்டுமெனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

# நாளை...

விலைகள் குறைக்கப்பட்டுள்ள போதிலும் அதன் பயன், கிராம மட்டத்தில் உள்ள மக்களை சென்றடைவதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கோதுமை மாவின் விலை குறைந்துள்ளமை மற்றும் கடந்த காலங்களில் அதிகரித்து காணப்பட்ட கோழி இறைச்சி மற்றும் மீன் என்பவற்றின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ள காரணத்தால் உணவுகளின் விலைகளும் குறைக்கப்பட வேண்டும் என்றார்.

அதற்கமைய, நாளை 1ஆம் திகதி முதல் பல உணவு வகைகளின் விலையை 10 சதவீதத்தால் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்ட அவர், மொத்த சந்தையில் குறைவடைந்துள்ள விலைக்கு அமைய கிராமங்களில் உள்ள வர்த்தக நிலையங்களிலும் பொருட்களின் விலையை குறைப்பதற்கான செயற்பாடு முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# தேசிய சிறுவர்...

துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பிலான ஆரம்பகட்ட விசாரணை அறிக்கை, பொலிஸாரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

திஹகொட, மிதெல்லவல குறுக்கு வீதியில் வெள்ளிக்கிழமை மாலை இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான சிறுவன் உள்ளிட்ட 6 பேர் விகாரையொன்றில் இடம்பெறவிருந்த பெரஹெரவில் பங்குகொள்வதற்காக மயிலிறகுகள் சேகரிக்கும் நோக்கில் முச்சக்கரவண்டியில் சென்றுள்ளனர்.

இதற்கிடையில், குறித்த பிரதேசத்தில் போதைப்பொருள் சுற்றிவளைப்பொன்றினை மேற்கொள்வதற்காக சென்றிருந்த பொலிஸ் அதிகாரிகள் மூவர் முச்சக்கரவண்டியை சோதனைக்கு ட்டபடுத்தியுள்ளனர்.

அதன்போது, அங்கிருந்த மூன்று சிறுவர்கள் தப்பி ஓடியுள்ளதுடன், பின்னால் இருந்த 15 வயதுடைய ஹரேஷ் ஹங்சக தேஷாந்த எனும் சிறுவன் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி நேற்று (30) மரணமானார்.

# இலங்கையில் பூங்கா...

இதுகுறித்து குறித்த பத்திரிகையால் விசுவப்பட்ட போதே இந்த விடயம் தெரியவந்துள்ளதுடன், இலங்கையில் பூங்காவை திறப்பதற்கான கலந்துரையாடலை டிஸ்னி நிறுவனத்துடன் ஆரம்பித்துள்ளதாக டயானா கமகே தெரிவித்துள்ளார்.

எனினும், யாருடன் தொடர்பு கொண்டார் அல்லது மேலதிக விவரங்களை வழங்க அவர் மறுத்துவிட்டார் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வோல்ட் டிஸ்னி நிறுவனத்தின் அழைப்பின் பேரில், இலங்கையில் 18 பில்லியன் டொலர் முதலீட்டுக்கான ஆரம்பத் திட்டங்களைப் பற்றி கலந்துரையாடுவதற்காக இராஜாங்க அமைச்சர் அடுத்த மாதம் அமெரிக்காவில் உள்ள பர்பேங்குக்கு விஜயம் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இலங்கையில் டிஸ்னிலேண்ட் பூங்கா ஒன்றை அமைப்பதற்கு அழைப்பு விடுத்து வோல்ட் டிஸ்னி நிறுவனத்திற்கு இராஜாங்க அமைச்சர் முன்னதாக கடிதம் எழுதியிருந்ததாகவும் இந்நிலையில் டிஸ்னி நிறுவன முதலீட்டாளர் உறவுகளின் சிரேஷ்ட உப தலைவரான அலெக்ஸியா எஸ். குவாட்ரானி இராஜாங்க அமைச்சரை கலந்துரையாடலுக்கு அழைத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் நவம்பர் மாத இறுதியில் ஆய்வுகளை நடத்துவதற்கு இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாகவும் மத்தள விமான நிலையம் உள்ளிட்ட பிரதேசத்தில் உள்ள பாரிய உட்கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்துவதற்கு இவ்வாறான முதலீடு நன்மை பயக்கும் என இராஜாங்க அமைச்சர் தெரிவித்ததாக செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தலை...

இன்னுமொரு பாராளுமன்ற தெரிவுக்குழுவை ஸ்தாபிக்குமாறு கோரி நீதியமைச்சர் கடிதம் அனுப்பியுள்ளமையையும் அவர் சுடடிக்காட்டியுள்ளார்.

மாகாண சபைத் தேர்தல்கள் பல வருடங்களாக ஒத்திவைக்கப்படும் நிலையில் தேர்தலை ஒத்திவைக்கும் சூழ்ச்சியாகவே இது மேற்கொள்ளப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.






# தீபாவளித் திருநாள் நிகழ்வுகள்

தீபாவளித்திருநாளின் பிரகாசத்தையும் மகிழ்ச்சியையும் கொண்டாடும் நிகழ்வுகள் கொழும்பில் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன. கொழும்பு வாழ் வெளிநாட்டவர்கள் கலாசார அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விசேட நிகழ்வுகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்தியாவின் பல்வேறுமாநிலங்கள் மற்றும் இலங்கைக்குரிய பாரம்பரிய உடைகளுடன் பங்கேற்ற விருந்தினர்கள் இந்நிகழ்வுக்கு மேலும்மெருகூட்டினர். இந்தியா-இலங்கை இடையிலான பிணைப்பு,இந்தியாவின் மகிமை மற்றும் அழகை நினைவூட்டுவதாகவும் இந்நிகழ்வுகள் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வரியைவிட நிதி பெரியது

■ ஷேன் செனவிரத்ன

சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை அனுமதி கிடைத்ததும், அந்த நிதியத்துடன் முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தைகள் தொடர்பான தகவல்கள் அறிவிக்கப்படுமென பிரதமர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் (29) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பிரதமர், சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதுடன், நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபைக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. எதிர்வரும் வரவு- செலவு திட்டத்தின்போது நாணய நிதியம், உலக வங்கி மற்றும் நட்பு நாடுகள் இலங்கைக்கு வழங்கிய உதவிகள் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடல்களில் நிதி அமைச்சர் என்கிற ரீதியில் ஜனாதிபதியும், மத்திய வங்கியின் ஆளுநர், திறைச்சேரியின் செயலாளர் ஆகியோர் கலந்துகொள்வார்கள் என்றார்.



இது தொடர்பில் பலரும் பல்வேறுக் கருத்துக்களைக் கூறி வருகிறார்கள். ஆனால் நாடு முகங்கொடுக்கும் பொருளாதார நெருக்கடி தொடர்பில் எவரும் கதைப்பதில்லை. உணவுகளை உற்பத்தி செய்யும் நாட்டுக்கு வெளிநாடுகளில் இருந்து உணவை இறக்குமதி செய்ய அவசியமில்லை என உலக வங்கி கூறியுள்ளது. அனைவரும் ஒன்றிணைந்து நெருக்கடியை வெற்றிக்கொள்ள வேண்டும் என்றார்.

அரசாங்கத்தை தொடர்ந்து கொண்டு செல்லவும், அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்குவதற்கும் பாரிய நிதி தேவைப்படுகிறது. அரசாங்கம் அறவிடும் வரியைவிட இந்த நிதி பெரியது என்றார்.

# மகனின் தகவலில் தந்தை கைது

காலி - வடரக பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி ரவைகள் 28 உடன் வீட்டின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார் என தென் மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

தனது தந்தை துப்பாக்கி ரவைகளை வீட்டில் மறைத்து வைத்திருப்பதாக பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து அவரது மகன் தகவல் வழங்கியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் வீட்டை சோதனையிட்டுள்ளனர். எனினும் இதன்போது சந்தேகநபர் வீட்டில் இல்லை எனவும், "கணவரிடம் துப்பாக்கி ரவைகள் இருப்பதாக மனைவி கூறினார். ஆனால், அவை எங்கிருக்கிறது என்பது தொடர்பில் எமக்கு தெரியாது." என்றும் தெரிவித்துள்ளார்.

தன்னிடம் துப்பாக்கி ரவைகள் இருப்பதாக மகனிடமும் அப்பா கூறியிருந்தபோதிலும், நேற்று முன்தினம் (29) அப்பாவுடன் ஏற்பட்ட பிரச்சினைக் காரணமாக வீட்டில் துப்பாக்கி ரவைகள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு மகன் தகவல் வழங்கியுள்ளார்.

# சிறுவர்களை டெங்கு கொல்கிறது

டெங்கு நோயால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை 60ஆக அதிகரித்துள்ள நிலையில், இதில் சிறுவர்களே அதிகளவில் உயிரிழப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் மாத்திரம் 62 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு டெங்கு உறுதி செய்யப்பட்டுள்ளது. கடந்த வருடம் நுளம்புகளால் பரவும் நோய்களால் 35 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், இந்த வருடத்தின் ஒக்டோபர் மாதம் வரையில் மாத்திரம் அந்த எண்ணிக்கை 62 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

டெங்கு ஆபத்து அடுத்த இரு மாதங்களில் அதிகளவில் காணப்படும் எனவும், மழையுடனான வானிலை முடிவடைந்தப் பின்னர் டெங்கு நுளம்புகளின் இனப்பெருக்கக் காலம் ஆரம்பிக்கும் எனவும் வைத்தியர்கள் எச்சரிக்கின்றனர்.

டெங்குவால் அதிகளவில் சிறுவர்கள் உயிரிழக்கிறார்கள். இதனைத் தடுக்க வேண்டும். எவ்வாறாயினும் பொருளாதார நெருக்கடிக் காரணமாக ஏற்பட்டுள்ளப் போக்குவரத்துப் பிரச்சினைகளால் உரிய நேரத்தில் சிகிச்சைப் பெற்றுக்கொள்வதில் தாமதங்கள் ஏற்படுவதாகவும் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

24 மணித்தியாலங்களுக்கு அதிகமாக எவருக்காவது காய்ச்சல் காணப்படுமாக இருந்தால் அவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்கு செல்ல வேண்டும் எனவும், காய்ச்சல்களுக்கு பெரசிட்டமோலை மாத்திரம் எடுத்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வாக்கெடுப்பை ஆளுங்கட்சியினர் தவிர்த்தால் ஆட்சிக் கவிழும்

நிதி அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கக் கொண்டுவரும் வரவு -செலவு திட்டம் மீதான வாக்கெடுப்பில் அரசாங்கம் தோல்வியடைந்தால், ஆட்சிக் கவிழும் ஆபத்து இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

21ஆவது திருத்தச் சட்டம் மீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாத ஆளுங்கட்சியினர் வரவு-செலவு திட்டம் மீதான வாக்கெடுப்பின்போதும் கலந்துக்கொள்ளாமல் இருப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாகவும், அவ்வாறு நடந்தால் வரவு-செலவு திட்டம் தோற்கடிக்கப்பட்டு ஆட்சி கவிழும் எனவும் தெரிவித்தார்.

21ஆவது திருத்தச் சட்டம் மீதான வாக்கெடுப்பில் கலந்துக்கொள்ளாத ஆளுங்கட்சி எம்.பிக்கள் தங்களுக்கு அமைச்சுப் பதவிகள், குடும்ப உறுப்பினர்கள், நெருங்கியவர்களுக்கு ஆளுநர் பதவிகளை பெற்றுக்கொள்வதற்கான போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர் என்றார்.

ஆளுங்கட்சியைச் சேர்ந்த சிறிய அளவிலான எம்.பிகள் கூட வரவு -செலவு திட்டம் மீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை என்றால், நிச்சியமாக வரவு- செலவு திட்டம் தோற்கடிக்கப்படும் என்றார்.

## சரணடைந்த புலிகளுக்கு நடந்தது என்ன

# வருடங்களுக்குப் பின்னர் விசாரணை

இறுதி யுத்தக் காலப் பகுதியில் இராணுவத்திடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள், தளபதிகள் உள்ளிட்ட முக்கியப் பொறுப்புகளில் இருந்தவர்கள் தொடர்பான தகவல்களை தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இலங்கை இராணுவத்திடம் 2019.04.04 அன்று தமிழ்மிரர் கோரியிருந்தது.

எனினும், இந்த விண்ணப்பத்துக்கு, "இறுதி யுத்தக் காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் எவரும் இலங்கை இராணுவத்திடம் சரணடையவில்லை. அவர்கள் இலங்கை அரசாங்கத்திடமே சரணடைந்திருந்தனர். " என இராணுவம் பதிலளித்திருத்திருந்தது.

RTI விண்ணப்பத்துக்கு இராணுவத்தின் தகவல் அதிகாரி வழங்கியிருந்த பதில் திருப்தியில்லை என்பதால் இராணுவத்தின் குறித்தளிக்கப்பட்ட அதிகாரியிடம் 2019.07.08 அன்று மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது, சரணடைந்த புலிகள் தொடர்பான தகவல்களை புனர்வாழ்வு ஆணையாளர் நாயக பணியகத்திடம் பெற்றுக்கொள்ளுமாறு இராணுவம் பதில் வழங்கியிருந்தது.

இதற்கு எதிராக தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவில் 2019.10.03 அன்று மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தது.

# 2023 பட்ஜெட் காலத்தில் அமைச்சர்களுக்கு கட்டுப்பாடு

2023 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவு திட்டம் மீதான விவாதம் நடைபெற உள்ளதால், அமைச்சர்கள், சிரேஷ்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி செயலகம் பயணக்கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இதன்படி, அடுத்த மாதம் 14ஆம் திகதியிலிருந்து டிசெம்பர் 8ஆம் திகதி வரையில் பாராளுமன்றத்தில் வரவு -செலவு திட்டம் மீதான விவாதம் நடைபெற உள்ளது. இதற்கிடையில் அமைச்சர்கள் எவரும் தனிப்பட்ட, உத்தியோகபூர்வ பயணங்களை மேற்கொள்ளக்கூடாது அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலகம் சுற்றுநிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்கள், மேலதிக செயலாளர்கள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ள வேண்டாமென குறிப்பிடப்பட்டுள்ளது.

நிதி அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நவம்பர் 14ஆம் திகதி 1.30 மணியளவில் பாராளுமன்றத்தில் வரவு-செலவு திட்டத்தை சமர்ப்பிக்க உள்ளார்.

வரவு-செலவு திட்டம் மீதான இரண்டாவது வாசிப்பு நவம்பர் 15ஆம் திகதியில் ஆரம்பிக்கப்பட்டு 22ஆம் திகதி வாக்கெடுப்போடு நிறைவடைய உள்ளது. இதன்படி வரவு-செலவு திட்டம் மீதான குழுநிலை விவாதம் 23ஆம் திகதியிலிருந்து டிசெம்பர் 8ஆம் திகதி வரையில் நடைபெற உள்ளது. மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசெம்பர் 8ஆம் திகதி நடைபெற உள்ளது.

# இ.தொ.காவுடன் இணைந்து செயற்படுவோம்

■ எஸ்.கணேசன்

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களை, சிறுதோட்ட உரிமையாளர்களாக்குவதற்கான வேலைத்திட்டத்தின்போது தமிழ் முற்போக்கு கூட்டணியும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸூம் இணைந்து செயற்படும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

மலையகத்தில் இனி வன்முறை அரசியலுக்கு இடமில்லை. புதிய அரசியல் கலாசாரம் பிறந்துள்ளதாகவும் திகா மேலும் தெரிவித்துள்ளார்.



தமிழ் முற்போக்கு கூட்டணியின தலைமையக திறப்பு விழாவில் நேற்று(30) கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், நான் நான்கு வருடங்களாக அமைச்சராக இருந்தேன், அக்காலப்பகுதியில் மக்களுக்கு சிறந்த சேவை ஆற்றினேன். பெருந்தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்கும் திட்டம் வெற்றியளிக்க இரு தொழிற்சங்கங்களும் ஒன்றிணைய வேண்டும்.

கடந்த காலங்களில் தொண்டர்களை, தலைவர்கள் தூண்டிவிட்டனர். இதனால் வன்முறை அரசியல் உருவானது. சிறைச்சாலைகளுக்குகூட செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் இனி அவ்வாறு நடக்காது, அவர்கள் அரசியலை அவர்கள் செய்வார்கள், எங்கள் அரசியலை நாம் செய்வோம் என்றார்.



சில முஸ்லிம் அமைப்புகளின்

# தடை நீங்கும்

நூருல் ஹுதா உமர்

பாதுகாப்பு அமைச்சின் தடைப் பட்டியலில் உள்ள 11 முஸ்லிம் அமைப்புகளில் 6 அமைப்புக்கள் மீதான தடையை நீக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், இதன் முதற்கட்ட நடவடிக்கையாக குறித்த 6 அமைப்புகளின் முக்கிய பிரதிநிதிகளுடன் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் அண்மையில் கலந்துரையாடியுள்ளதாகவும் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பில் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்தார்.

எமது வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார். இதனடிப்படையில் தடை செய்யப்பட்ட குறித்த 6 அமைப்புகளின் முக்கியஸ்தர்களுடன் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் தனித்தனியே கலந்துரையாடியுள்ளனர் அந்த 6 முஸ்லிம் அமைப்புகளிடமிருந்தும் பாதுகாப்பு அமைச்சினால் சில ஆவணங்கள் கோரப்பட்டுள்ளன. அந்த ஆவணங்கள் கிடைத்தவுடன் அதிகாரிகள் அதனை பரிசீலனை செய்து 6 அமைப்புகள் மீதான தடை நீக்கப்படுமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என்றார்.



## 10 பேருக்கு சக்கர கதிரைகள்


எப்.முபாரக்

திருகோணமலை மாவட்டத்தில் விசேட தேவையுடைய 10 பேருக்கு சக்கர கதிரைகள், மாவட்ட செயலகத்தில் வைத்து அரசாங்க அதிபர் பி.எச்.என். ஜயவிக்ரமவினால் சனிக்கிழமை (29) வழங்கி வைக்கப்பட்டன.

புலம்பெயர் சமூகத்தைச்சேர்ந்த நலன்புரி சேவைகளை மேற்கொள்ளும் ரமேஸ், கோமதி தம்பதியினர் தமது 25 ஆவது வருட திருமண நிறைவை முன்னிட்டு இதற்கான அனுசரனையை வழங்கினர்.

திருகோணமலை மாவட்ட பிரதம கணக்காளர் எஸ்.பரமேஸ்வரனின் ஒருங்கிணைப்பில் இச்சக்கர நாற்காலிகள் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவரின் ஒருங்கிணைப்பில் மொத்தமாக இதுவரை விசேட தேவையுடைய 100 பேருக்கு சக்கர கதிரைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 9க்கு 4 இல்: 28 பவுண் ரூ.2 இலட்சம் திருட்டு



கனகராசா சரவணன்

மட்டக்களப்பு தலைமையக, காத்தான்குடி பொலிஸ்பிரிவுகளில் ஒரே நாளில் 9 மணி நேரத்துக்குள் 4 வீடுகளை உடைத்து அங்கிருந்து 28 பவுண் தங்க ஆபரணங்கள் 2 இலட்சத்து 83 ஆயிரம் ரூபாய் பணம் மடிக்கணினி, மணிகூடு போன்ற பெறுமதியான பொருட்களை திருடப்பட்டுள்ளன.

தாளங்குடா பிரதேசத்திலுள்ள வீட்டில் சனிக்கிழமை (29) அதிகாலை வீட்டின் உரிமையாளர் ஆழ்ந்த நித்திரையில் இருந்துள்ளார். யன்னலை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 8 அரை பவுண் தங்க ஆபரணங்களையும் 33 ஆயிரம் ரூபாய் பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

இராசதுரை கிராமத்திலுள்ள வீடொன்றில் தனித்து வசித்துவரும் பெண்ணொருவர் வீட்டை பூட்டிவிட்டு பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக 9 மணிக்கு சந்தைக்கு சென்று, ஒரு மணிநேரத்தில் வீட்டுக்கு வந்தபோது வீட்டின் கதவை உடைத்து அங்கிருந்த 5 பவுண் தங்க ஆபரணங்களையும் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

பாரதி வீதியிலுள்ள வீடு ஒன்றின் உரிமையாளர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு பகல் உணவை கொடுப்பதற்காக 12 மணியளவில் அவரது மனைவி வீட்டை பூட்டிவிட்டு வைத்தியசாலைக்கு சென்று 12.45 மணிக்கு மீண்டும் வீட்டிற்கு திரும்பி வந்தபோது வீட்டின் கதவை உடைத்து 14 பவுண் தங்க ஆபரணங்கள் திருடிச்செல்லப்பட்டுள்ளது.

பார்வீதியிலுள்ள வீடு ஒன்றின் உரிமையாளர் சம்பவதினமான காலை 8 மணிக்கு வீட்டை பூட்டிவிட்டு, மனைவியை வேலைக்கு அனுப்பியுள்ளார். அவர் மரக்கறி தோட்ட பண்ணைக்கு சென்று பணியை முடித்துவிட்டு பகல் 11 மணிக்கு வீடு திரும்பிய போது வீட்டின் கதவை உடைத்து இங்கிருந்து 4 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் பெறுமதியான மடிகணினி, மணிக்கூடு, கையடக்க தொலைபேசி போன்றவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

## சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிப்பு



தேசிய வாசிப்பு மாதத்தில், சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் மாணவர்களிடையே நடத்தப்பட்ட வாசிப்பு மற்றும் கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கின்ற வைபவம் பாடசாலை மண்டபத்தில் சனிக்கிழமை இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பேஜேஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் ஆய்வாளருமான சிராஜ் மஷூர் (நளீமி) பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவித்தார்.

இதன்போது வாசிப்பு மற்றும் கட்டுரைப் போட்டிகளில் பங்குபற்றி முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்ற 31 மாணவ, மாணவிகள் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி அதிதிகளால் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், பிரதி அதிபர் நிப்கா அன்ஸார், உதவி அதிபர்களான எம். எச்.நுஸ்ரத் பேகம், ஐனுல் மர்சுனா மற்றும் ஆசிரியர்கள், பகுதித் தலைவர்கள், மாணவ, மாணவிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# நாடு திரும்பியோருக்கு நடமாடும் சேவை

தமிழகத்தில் இருந்து நாடு திரும்பியுள்ள சுமார் 7 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 500 இலங்கை தமிழருக்காக, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய இரு மாவட்டங்களிலும் நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

இந்த நடமாடும் சேவை, இன்று (31) திங்கட்கிழமையும் நாளை (01) செவ்வாய்க்கிழமையும் நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இருந்து நாடு திரும்பி வடமாகாணத்தில் குடியேறியிருப்போர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையிலேயே இந்த நடமாடும் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது என நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நடமாடும் சேவையின் போது, இலங்கை பிரஜாவுரிமையை பெற்றுக்கொடுத்தல், பிறப்பு, இறப்பு திருமணச் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளல் அவை தொடர்பிலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது மற்றும் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்டவை முன்னெடுக்கப்படும்.

அவை மட்டுமன்றி காணிகள் தொடர்பிலான பிரச்சினைகள் மற்றும் மீள் குடியேற்றம் தொடர்பிலான சிக்கல்கள் தொடர்பிலும் இந்த நடமாடும் சேவைகளின் ஊடாக ஆலோசனைகள் வழங்கப்படும்.

இந்த சேவைகளில் நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ, அமைச்சின் செயலாளர், அதிகாரிகள் மற்றும் துறைகளுடன் தொடர்புடைய அதிகாரிகளும் பங்கேற்கவுள்ளனர்.

## மூவர் கைது

செ.கீதாஞ்சன்

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சம்மளங்குளம் பகுதியில், புதையல் தோண்ட முற்பட்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் மூவர் சனிக்கிழமை (29) மாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதிலொருவர், ஒட்டுசுட்டான் சிவநகர் பகுதியினை சேர்ந்தவர். அந்த மூவரையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என ஒட்டுசுட்டான் பொலிஸார் தெரிவித்தனர்.

## பெண் சடலமாக மீட்பு

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டு, யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்று (30) ஒப்படைக்கப்பட்டுள்ளது.

4 அடி 5 அங்குலம் உயரமுடைய அந்தப் பெண், பச்சை நிறத்திலான சேலையை அணிந்துள்ளார்.

வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள குறித்த சடலத்தை அடையாளம் காண உதவுமாறு வைத்திய சாலை நிர்வாகம், பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

## கரைவலை தொழிலாளி கடல் இழுத்து உயிரிழப்பு

செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, கருநாட்டுக்கேணி கடற்கரையில் கரைவலை தொழில் செய்துவரும் 23 அகவையுடைய தொழிலாளி ஒருவர், கடல் அலையில் இழுத்து செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார்.



சனிக்கிழமை (29) காலை, கயிறு இழுத்த வேளை கடலலையில் இழுத்து செல்லப்பட்டு காணாமல் போயிருந்தார். அவரை கடற்தொழிலாளர்கள் தேடிக்கொண்டிருந்தனர். இந்நிலையில், கொக்குளாய் கடற்கரையில் நேற்று (30) காலை அவரது சடலம் கரையொதுங்கியுள்ளது.

சடலத்தை மீட்ட மீனவர்கள் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் கொக்கிளாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். இவர் நீர்கொழும்பு பிரதேசத்தை சேர்ந்தவர் என அறியமுடிகின்றது.

## மீன் வியாபாரி மயங்கி விழுந்து மரணம்

செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, செல்வபுரம் பகுதியில் மீன்களை கொள்வனவு செய்வதற்காக, நேற்றுக்காலை வீதியில் பயணித்துக்கொண்டிருந்த மீன் வியாபாரி ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். அவருடைய சடலம், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

குரவில் உடையார் கட்டுப்பகுதியினை சேர்ந்த ஆதிமுருகன் யோகரா என்ற வியாபாரியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளார் என மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானம்



சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்திலுடைய சிரமதான பணிகள், கொட்டும் மழைக்கு மத்தியில் நேற்று (30) காலை ஆரம்பிக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டுக்கான மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள், எதிர்வரும் நவம்பர் 27ஆம் திகதி இடம்பெற உள்ளது. இந்நிலையில் விசுவமடு தேராவில் மாவீரர் துயிலுமில்ல பணி குழுவினரால் துயிலும் இல்ல வளாகம் சிரமதானம் செய்கின்ற வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

தேராவில் துயிலும் இல்ல வளாகத்தில் காலை 9.30 மணியளவில் சுடரேற்றி அஞ்சலி செலுத்திய பின்னர் மக்கள் சிரமதான பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தேராவில் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழு மற்றும் மாவீரர்களுடைய பெற்றோர் நலம் விரும்பிகள் சமூக செயற்பாட்டாளர்கள் சிவில் சமூக அமைப்பு பிரதிநிதிகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் இணைந்து கொண்டு இந்த சிரமதான பணியை முன்னெடுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அதிபர் அறைந்ததில் மாணவனுக்கு பாதிப்பு

மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சியில் உள்ள பாடசாலை ஒன்றின் அதிபரால் தாக்கப்பட்ட, 8ஆம் தரத்தில் கல்விப்பயிலும் மாணவன், சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சனிக்கிழமை காலை பாடசாலையின் காலை ஆராதனையின் போது ஒலி பெருக்கியின் வளாகத்தை முன்பாக அழைத்த அதிபர், சகல மாணவர்களின் முன்னிலையிலும், சிறுவர் இல்லபேருந்தில் நீ வரக் கூடாது எனத் தெரிவித்து கன்னத்தில் அறைந்துள்ளார் என பாதிக்கப்பட்ட சிறுவனின் தந்தை தெரிவித்துள்ளார்.

சிறுவர் இல்லம் ஒன்றுக்கு சொந்தமான சிற்றூர்தி, எனது மகனையும் ஏற்றி அனுப்புவது வழக்கமாகும். பொருளாதார நெருக்கடி மிக்க சூழலில் அதுவே எனக்கு நன்மையாக இருந்தது. இதனால் நான் தொடர்ந்தும் குறித்த பேருந்தில் அனுப்பியிருந்தேன்.எனினும், காலை ஆராதனையில் சொல்லியும் கேட்கவில்லையெனக் கூறியே மகனின் கன்னத்தில் அறைந்துள்ளார்.

# சிரத்தை காட்டவும்

எம்.எஸ்.எம். ஹனீபா

இளைஞர்களிடத்தில் போதைவஸ்து பாவனை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனால், பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகள் மீது அதிகூடிய கவனம் செலுத்த வேண்டுமென, அக்கரைப்பற்று உதவி பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.பி.எச். சௌவிரதன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிராமிய சிவில் பாதுகாப்பு ஆலோசனை குழுவின் உறுப்பினர்களுடன் போதைவஸ்து பாவனையைக் கட்டுப்படுத்துதல் மற்றும் குற்றச் செயல்களை தடுப்பது தொடர்பான கலந்துரையாடல் சனிக்கிழமை (29) மாலை அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

அங்கு தொடர்ந்து கருத்துரைத்த அவர், அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் போதைவஸ்துப் பாவனை நாளாந்தம் அதிகரித்து காணப்படுவதோடு குற்றச்செயல்களும் அதிகரித்து காணப்படுகின்றன. இதனை கட்டுப்படுத்துவதற்கு ஒவ்வொரு பெற்றோரும் பிள்ளைகள் மீது கவனம் செலுத்த வேண்டும்.

தற்போது நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் திருட்டுச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. இவ்வாறான சம்பவங்களை தடுப்பதற்கு ஒவ்வொருவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றார்.



## பேராசிரியராகப் பதவி உயர்வு

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் பீடாதிபதி கலாநிதி சிவரட்ணம் வசந்தரூபா, பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இதற்கான ஒப்புதலை பல்கலைக்கழகப் பேரவை வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் சனிக்கிழமை (29) நடைபெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமனங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த கலாநிதி சிவரட்ணம் வசந்தரூபாவின் விண்ணப்பத்தை மதிப்பீடு செய்த, விதந்துரைக்கப்பட்ட துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டு அறிக்கை, நேர்முகத் தேர்வு முடிவுகள் ஆகியன பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், விவசாய பீடத்தின் பீடாதிபதியும், விவசாய இரசாயனவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சிவரட்ணம் வசந்தரூபா, விவசாய இரசாயனவி யலில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.



# சிறிமா – சாஸ்திரி ஒப்பந்த நாள்



எம். பிரபா

இலங்கையின் மலையக தமிழர்களை இந்தியாவுக்கு நாடு கடத்தும் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கையெழுத்தான தினம் (ஒக்டோபர் 30)

இந்த ஒப்பந்தமானது ஸ்ரீமாவோ - சாஸ்திரி ஒப்பந்தம், இந்தோ - சிலோன் ஒப்பந்தம் மற்றும் பண்டாரநாயக்க - சாஸ்திரி ஒப்பந்தம் என்றும் அழைக்கப்படுகிறது.

இலங்கையின் பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்கா மற்றும் இந்தியாவின் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி ஆகியோருக்கு இடையே கையெழுத்திடப்பட்ட இந்த ஒப்பந்தமானது, 30 அக்டோபர் 1964 அன்று, அதிகாரப்பூர்வமாக, இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நபர்களுக்கான ஒப்பந்தம் என்று அறியப்பட்டது.

இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளி மக்களின் நிலை மற்றும் எதிர்காலத்தை தீர்மானிப்பதில் இந்த ஒப்பந்தமானது பெரும் தாக்கத்தை இன்று வரை செலுத்தி வருகின்றது.

ஆங்கிலேயர் ஆட்சியின் போது, இலங்கையின் கோப்பி, தேயிலை தோட்டங்களில் தொழில் புரிவதற்காக தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழர்கள் 1823ஆம் ஆண்டளவில் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர்.

இந்த தொடர்ச்சியான அழைத்து வரப்படல் மற்றும் மக்கள்தொகை வளர்ச்சியின் காரணமாக, 1921 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த மக்கள்தொகையில் 13.5 சதவீதம் (602,700) இந்தியத் தமிழர்கள் இருந்தனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் 1936 ஆம் ஆண்டில், இந்தியத் தமிழர்கள் 1,123,000 ஆக இருந்தனர், இது மொத்த இலங்கையின் மக்கள்தொகையில் 15.3 சதவீதமாகும் எனவும் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன. இலங்கையின் சிங்களத் தேசியவாதிகள் மலையக தமிழ் மக்கள் தொகை வளர்ச்சியைக் கண்டு ஏற்பட்ட கலக்கம் காரணமாக அவர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்தனர்.

இதனை தொடர்ந்து இலங்கை அரசாங்கம் இலங்கைக் குடியுரிமைச் சட்ட மூலத்தை அறிமுகப்படுத்தியது. இந்த சட்டம் 1948 இல் நடைமுறைக்கு வந்தது. இந்த சட்டமூலத்தின் மூலம் சுமார் 5,000 இந்திய தமிழர்களுக்கு இலங்கை குடியுரிமை வழங்கி வைக்கப்பட்டாலும் சுமார் 700,000 க்கும் (சுமார் 11சதவீதம்) அதிகமான மலையக தமிழ் மக்கள் இலங்கையின் குடிமக்கள் அல்லாதவர்கள் அல்லது நாடற்றவர்களாக இருந்தனர்.

மேலும் 1954 இல், இதே பிரச்சினையை தீர்க்க நேரு - கொத்தலாவல ஒப்பந்தம் கையெழுத்தானது. ஆயினும் கூட, பிரச்சினை தீர்க்கப்படாமல் இருந்தது. 1962 இல், ஏறக்குறைய 975,000 இந்திய பிரஜைகள் சிலோன் மற்றும் இந்தியாவால் நாடற்றவர்கள் என சுட்டிக்காட்டப்பட்டனர்.

1964 இல், இரு நாடுகளும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர்களைக் கொண்டிருந்தன, மேலும் ஒரு புதிய சுற்று பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டன. பேச்சுவார்த்தைகள் ஆரம்பத்தில் நான்கு நாட்கள் நீடிக்கும் என்று திட்டமிடப்பட்டது, ஆனால் இறுதியில் ஆறு நாட்கள் ஆனது. பல சந்தர்ப்பங்களில் குறித்த பேச்சவார்த்தை தோழ்வியடையும் நிலையையும் எட்டிய போதும் இறுதியாக, இரு நாடுகளும் ஒரு உடன்படிக்கைக்கு ஒப்புக்கொண்டன,

இதனைத் தொடர்ந்து 1981 இல், 280,000 பேர் மட்டுமே இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டதாக மதிப்பிடப்பட்டது, மேலும் 160,000 பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்கப்பட்டது. இந்திய குடியுரிமை வழங்குவதிலும், திருப்பி அனுப்பப்படுவதிலும் இந்தியா தாமதமானது. 1982 இல், ஒப்பந்தத்தின் அமலாக்க காலம் முடிந்து விட்டதால், ஒப்பந்தத்தை இனி கருத்தில் கொள்ளாஅ முடியாது என்று இந்தியா அறிவித்தது. அத்தோடு இலங்கை உள்நாட்டுப் போரின் காரணமாக 1984 இல், இரு நாடுகளுக்கும் இடையிலான படகுச் சேவை இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக இந்தியாவுக்கான திருப்பி அனுப்பப்படுவது தடைப்பட்டது.

ஒக்டோபர் 1964 இல் சிறிமா - சாஸ்திரி உடன்படிக்கையின் படி இலங்கையில் வாழ்ந்த இந்திய வம்சாவளியினருக்கு 2003 இல் இலங்கை குடியுரிமை வழங்கியதன் மூலம் இலங்கையில் உள்ள இந்தியத் தமிழர்களிடையே இருந்த நாடற்றவர் பிரச்சினை இறுதியாகத் தீர்க்கப்பட்டது.

## கட்டணத்தால் நீண்டது வரிசை

சுதத்.எச்.எம்.ஹேவா

பஸ் கட்டணங்களை விட ரயில் கட்டணங்கள் குறைவாக இருப்பதன் காரணமாக, அதிகமானவர்கள் தற்போது ரயிலில் பயணிக்கத் தொடங்கியுள்ளனர்.

இதனால் பிரதான ரயில் நிலையங்களில் நீண்ட வரிசைகளில் பயணிகள் காத்திருக்கின்றனர்.

இதற்கமைய, நேற்றைய தினம் (30) ஹட்டன்



ரயில் நிலையத்தில் பயண அனுமதிச்சீட்டு பெறும் இடத்தில் நீண்ட வரிசையில் பயணிகள் காத்திருந்தனர்.

### தோட்டக் காணிகளின் பங்கீடு

# அழிவின் ஆரம்பம்

## சிலோன் தோட்ட அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

எஸ்.கணேசன்

பெருந்தோட்டக் காணிகளை பகிர்ந்தளிக்கும் யோசனையானது தேர்தல் கால வாக்குறுதி மட்டுமேயாகும். அந்த யோசனை அமுலுக்கு வராதென தெரிவித்துள்ள சிலோன் தோட்ட அதிகாரிகள் சங்கம், அவ்வாறு தோட்டக் காணிகளை பங்கீட்டால் அதுவே பெருந்தோட்டத்துறையின் அழிவின் ஆரம்பமாக அமையும். இத்திட்டத்தை நாம் எதிர்க்கின்றோம் என்றும் தெரிவித்துள்ளது.

நுவரெலியா -ரதெல்லயில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, பெருந்தோட்ட தொழிலாளர்களை சிறுதோட்ட உடமையாளர்களாக்கும் திட்டம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே சிலோன் தோட்ட அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் தயால் குமாரகே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உரம் விநியோகிக்கப்படும் என ஜனாதிபதி மற்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சர் ஆகியோர் அறிவிப்புகளை விடுத்து வந்தாலும், அதற்கான வேலைத்திட்டம் இன்னும் வகுக்கப்படவில்லை. அது தொடர்பில் எமக்கு தெளிவுபடுத்தவும் இல்லை. இது தாமதிக்கப்படுவதன் பின்னணியில் வேறு நோக்கம்கூட இருக்கலாம் என சந்தேகிக்கின்றோம் என்றார்.



தோட்டங்கள் காடாகி வருகின்றன என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை நாமும் ஏற்கின்றோம். ஏனெனில் களைக்கொல்லி மற்றும் புற்களை அழிக்ககூடிய மருந்துகள் இல்லை. தோட்டங்கள் காடாவதற்கு இதுவே காரணம். தோட்டங்கள் காடாகினால் கொழுந்து பறிக்க முடியாது. தற்போது 50 சதவீதமான தொழிலாளர்கள், இத்தொழியில் இருந்து வெளியேறியுள்ளனர். இறப்பர் தொழிலாளர்களும் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர்.

பெருந்தோட்டக் காணிகளை பகிர்ந்தளிக்கும் யோசனையானது தோல்வி கண்ட பொறிமுறையாகும். பலரும் அது பற்றி கதைக்கின்றனர். ஆனால் பரீட்சார்த்த நடவடிக்கைகூட தோல்வி கண்டுள்ளது. இதனை நாம் தேர்தல் கால வாக்குறுதியாகவே கருதுகின்றோம். அதனால்தான் இன்றளவில் நடைமுறைக்கு வராமல் உள்ளது.

தொழிலாளர்களுக்கு காணிகளை பங்கிட்டு வழங்கினால் அவர்கள் தேயிலை பயிரிடமாட்டார்கள். கிழங்கு, கரட் உள்ளிட்ட விவசாய உற்பத்திகளையே மேற்கொள்வார்கள். இதனால் தேயிலை ஏற்றுமதி பாதிக்கப்படும். குறிப்பாக பெருந்தோட்டத்துறையின் அழிவின் ஆரம்பமாகக்கூட இதனை பார்க்கலாம். பெருந்தோட்டத்துறையின் இருப்பை பாதுகாக்க முடியாது என்பதே எமது கருத்தாகும் என்றார்.







## மலர்ந்தது ‘தாயகம்’

டிக்கோயா– ஒட்டரி பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைமையகக் கட்டடத் தொகுதியான தாயகம் நேற்று (30) ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் , எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் எம்.பியுமான மனோ கணேசன், பழனி திகாம்பரம் எம். பி, இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே, கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகர் திருமதி. ஆதிரா, பாராளுமன்ற உறுப்பினர்களான ஜீவன் தொண்டமான், இராதாகிருஸ்ணன், வேலுகுமார், உதயகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ( எஸ்.கணேசன், சதீஸ், ரஞ்சித் ராஜபக்ஷ)

## தம்பதி கைது: நீங்களும் வாருங்கள்

ஷேன் செனவிரத்ன



தனியார் பயிற்சி வகுப்புகளுக்கு வருகை தரும் மாணவர்கள் மற்றும் தனியார் வகுப்புக்கு வருகைத் தருபவர்களின் கையடக்கத் தொலைபேசி பணம் உள்ளிட்ட பெறுமதியான பொருட்களை அபகரிக்கும் தம்பதி கண்டி பொலிஸ் தலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹெரோய்ன் போதைக்கு அடிமையாகியுள்ளதாக கூறப்படும் தம்பதிகள், கண்டி வாவி மற்றும் அதனை அண்மித்த பகுதிகளுக்கு வருகைத் தரும் மாணவர்களின் கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட பெறுமதிமிக்க பொருட்களைத் திருடி வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இவ்வாறு இவர்களால் திருடப்பட்ட 8 இலட்சத்துக்கும் அதிக பெறுமதியுடைய 12 அலைபேசிகள், பல இடங்களில் அடகு வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் இருவரும் மாணவர்களை அச்சுறுத்தி அலைபேசிகள், பணம், பெறுமதியான கைக்கடிகாரங்கள் மற்றும் பெறுமதியான காலணிகள் போன்றவற்றையும் திருடிச் சென்றுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த தம்பதியினால் அசௌகரியத்துக்கு உள்ளான மாணவர்கள் இருப்பின் அவர்களை கண்டி பொலிஸ் தலைமையக குற்றப்பிரிவுக்கு வருமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ரிவஸ்டனில் சிரமதானம்

மஹேஸ் கீர்த்திரத்ன



மாத்தளை ரிவஸ்டன் பகுதியிலிருந்து இலுக்கும்பர வரையும் ரிவஸ்டனிலிருந்து இறத்தோட்டை வரையும் இரண்டு சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது வீதியின் இருமருங்கிலும் வீசப்பட்ட கழிவுகள் சேகரிக்கப்பட்டு, மீள்சுழற்சிக்காக அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த சிரமதானப் பணிகளில் இறத்தோட்டை,, லக்கல பிரதேச செயலகங்கள் அலுவலகம், இறத்தோட்டை பிரதேசசபை, இறத்தோட்டை பொலிஸார், மஹா ராவணா நலன்புரி அமைப்பு மற்றும் பம்பரகிரிஎல்ல கிராம அபிவிருத்தி சங்கம் என்பன இணைந்திருந்தன.

சிரமதானப் பணிகளில் ஈடுபட்டவர்களுக்கான போக்குவரத்து வசிதகள் இலங்கை பசுமை அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இறத்தோட்டை பிரதேச செயலாளர் ரிஸ்மினா ரியால்தீனின் ஆலோசனைக்கமைய இந்த சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### மலையகத் தொழிலாளர்களின் விவகாரம்

## தந்தையின் திருப்பு முனைக்கு உரமூட்ட செயற்படுவேன்

எஸ்.கணேசன்

மலையக மக்களுக்கு ரணசிங்க பிரேமதாச, குடியுரிமையை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தார். அது ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அதேபோல மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் சிறுதோட்ட உடமையாளர்கள் ஆக்கப்படுவார்கள். அதன்மூலம் ஏற்றுமதி பொருளாதாரமும் மேம்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அறிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவின் “பிரபஞ்சம்” எனும் திட்டத்தின் கீழ் கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் அமைந்துள்ள கேம்பிரிட்ஜ் கல்லூரிக்கு நேற்றுமுன்தினம் (29) பஸ் ஒன்றை வழங்கி வைத்தார்.


இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“ மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்கும் திட்டம் தொடர்பில் சிலர் விமர்சனங்களை முன்வைத்தனர். சாத்தியமில்லை எனவும் கதை கட்டினர். அது தவறு, எமது ஆட்சியில் நிச்சயம் சிறுதோட்ட உரிமையாளர்கள் உருவாக்கப்படுவார்கள். ஏற்றுமதி துறையில் புரட்சி இடம்பெறும். தேயிலை பயிரிடக்கூடிய இடங்களை தரிசு நிலங்களாக வைப்பதில் பயன் கிட்டாது.

பெருந்தோட்ட மக்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்குவேன் என நான் கூறியபோது, எனக்கு எதிராக மொட்டு கட்சியினர் சேறுபூசினர். ஏளனம் செய்தனர இவர்கள்தான் உரத்துக்கு தடை விதித்தனர், பெருந்தோட்டத்துறைக்கு பெரும் தீங்கு விளைவித்தனர். பெருந்தோட்ட மக்களை இவர்கள்தான் இருளுக்குள் தள்ளியவர்கள், இனவாதத்தை கையில் எடுத்தனர். பெருந்தோட்ட மக்களை மட்டுமல்ல ஒட்டு மொத்த நாட்டு மக்களையுமே இவர்கள் குழிக்குள் தள்ளினர்.

இவ்வாறு நாட்டு மக்களை துன்பத்துக்குள் தள்ளிவிட்டு, சாம்பல் மேட்டியில் இருந்து மீண்டெழுவோம் என தற்போது சூளுரைத்து வருகின்றனர். நாட்டை சாம்பலாக்கிவிட்டுதான் அவர்கள் மீண்டெழ பார்க்கின்றனர். அவர்களின் மீள் எழுச்சி மக்களின் கைகளில்தான் உள்ளது என்பதை மறந்துவிடக்கூடாது.

நாட்டு வளங்களை சூறையாடிய, நாட்டை வங்குரோத்து அடைய செய்து, தமது குடும்பத்தை செல்வந்தர்களாக்கியவர்களுக்கு மீண்டெழும் வாய்ப்பை மக்கள் வழங்குவார்களா? நாட்டில் தற்போது உள்ள அரசாங்கமும் வங்குரோத்து அரசாங்கம்தான். அதனால்தான் மக்கள்மீது வரிசுமை திணிக்கப்படுகின்றது. எமது நாட்டில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணம் எமது ஆட்சியில் மீளப்பெறப்படும். களவாடப்பட்ட சொத்துகள் நாட்டுக்கு கொண்டுவரப்படும். இதற்கு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.



### அபர்டின் நீர்வீழ்ச்சியின் அடிவாரத்தில்

## நீராடியவர் உயிரிழந்தார்

ரஞ்சித் ராஜபக்ஷ

கினிகத்கேஹன அபர்டின் நீர்வீழ்ச்சியின் அடிவாரத்தில் நீராடிக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் (29) பகல் இடம்பெற்றுள்ளதாகவும் குறித்த நீர்வீழ்ச்சிக்கு அண்மையில் வசிக்கும் 34 வயதுடைய நுவன் பிரேமச்சந்திர என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நீர்வீழ்ச்சியைக் காண்பிப்பதற்காக தனது வீட்டிற்கு வந்த உறவினர்களை அவ்விளைஞன் அழைத்துச் சென்றுள்ளார். இதன்போது உறவினர்கள் நீர்வீழ்ச்சியை பார்த்துக் கொண்டிருந்த போது, அவர் அடிவாரத்தில் நீராடியுள்ளார். திடீரென நீரில் மூழ்கி, பின்னர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

# கழித்துக் கூட்டிப் பார்த்தால் பற்றாக்குறையே விஞ்சி நிற்கிறது

பொருட்களின் விலைகளும் சேவைகளின் கட்டணங்களும், கிடுகிடுவென எகிறியதால் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இடைக்கிடையே பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டாலும், அதன் இலாபத்தை நுகர்வோரால் நுகர்ந்துகூடப் பார்க்கமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

எரிபொருட்களின் விலைகள் குறைந்தபோதும் ஏனைய சேவைகளின் கட்டணங்கள் குறைக்கப்படவில்லை. கோதுமை மாவின் விலையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டபோது, ஒரு சில ஹோட்டல்களில் பராட்டா, முட்டை பராட்டா மற்றும் ரொட்டி வகைகளின் விலைகள் ஓரளவுக்கு குறைக்கப்பட்டுள்ளன. இன்னும் சிலர், மொத்த வர்த்தகர்கள் தான் குறைத்துள்ளனர் என மழுப்பலாகப் பதிலளிக்கின்றனர்.

பொருட்களின் விலை குறைப்பு அறிவிப்பு வெளியான அடுத்த நொடியிலேயே, நாட்டின் சகல பாகங்களிலும் விலைகளை குறைக்கமுடியாது. ஏனெனில் கூடியவிலையில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் கையிருப்பில் இருக்கும். விலை குறைக்கப்பட்டாலும் அந்தப் பொருட்கள் தூரப் பிரதேசங்களுக்குச் சென்றடைந்து இருக்காது. எனினும், அவ்வாறு சாக்குப் போக்குகளை நீண்ட நாட்களுக்குக் கூறிக்கொண்டிருக்க முடியாது.

விலை அதிகரிக்கக்கூடுமென எதிர்வுகூறப்பட்டதும் பொருட்களை பதுக்கிவைத்து, விலை அதிகரிக்கப்படும் வரையிலும் காத்திருக்கும் ஒருசில பெரும் முதலைகள், விலை குறைந்தவுடனேயே நுகர்வோருக்கு கொடுக்கவும் கற்றுக்கொள்ளவேண்டும். இல்லையேல் மாற்று நடவடிக்கைகளை மக்கள் நாடிவிடுவர்.

விலைகள் அதிரிக்கப்பட்டமையால் பிஸ்கட்டுக்கள் உண்பதை பலரும் கைவிட்டுள்ளனர். இதனால் ஒவ்வொரு கடைகளிலும் பிஸ்கட்டுகள் தேங்கிக் கிடந்தன என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

வியாபார யுக்தி எனும் போர்வைக்குள் சென்று, இரண்டுடொரு பிஸ்கட்டுகளை குறைத்துவிட்டு விலைகளை குறைத்தாலும் பெரும்பாலானவர்கள் எடுத்த முடிவில் உறுதியாக இருக்கின்றனர். ஆக, பிஸ்கட்டுகள் விலை போகவில்லை. இதேபோன்ற நிலைமை, சில பொருட்களுக்கு ஏற்பட்டால், வர்த்தகர்களுக்கே பெரும் பாதிப்பு ஏற்படும்.

இதற்கிடையே சமூகப் பாதுகாப்பு வரி, சமூகத்தை பள்ளத்துக்குள் தள்ளிக்கொண்டே செல்கின்றது. ஒவ்வொரு சேவைகளின் கட்டணங்களும் அதிகரித்துள்ளன. மின்சாரம், தண்ணீர் கட்டணங்கள் அதிகரித்துள்ளன. இதற்கிடையிலே தபால் நிலையங்கள் ஊடாக செலுத்தப்படும் நீர் மற்றும் மின்சார பட்டியல்களுக்காக அறவிடப்படும் சேவை கட்டணம் 20 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அஞ்சல் அலுவலகங்களுக்கான தினசரி செலவினம் அதிகரித்தமையும் சேவை கட்டணத்தை அதிகரிப்பதற்கு காரணமென தெரிவிக்கப்படுகிறது. இவையும் பொதுமகன் மீதே சுமத்தப்படுகின்றது.

ஒருபக்கம் விலைகள் ஓரளவுக்கு குறைந்தாலும் மறுபுறத்தில் சேவைகளின் கட்டண அதிகரிப்பால், விலைகுறைப்பின் எவ்விதமான பிரயோசனமும் மக்களுக்கு கிடைக்கவில்லை. நாளுக்கு நாள் சுமையே அதிகரித்துச் செல்கிறது. செலவுகளும் எகிறியே செல்கின்றன.

ஆகையால், குறைக்கப்படும் விலையை, அதிகரித்த விலையுடன் கழித்து, சேவைகளின் கட்டணங்களை கூட்டிப் பார்த்தால் பற்றாக்குறையே விஞ்சி நிற்கிறது. இந்த நிலைமை தொடர்ந்து நீடிக்குமாயின் மக்களால் வாழ்க்கையை கொண்டுநடத்த முடியாத துர்ப்பாக்கிய நிலைமையே ஏற்படும் என்பதை மீண்டுமொருதடவை ஞாபகமூட்டுகின்றோம்.



தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

மனித உயிர்களுக்கு மட்டுமல்ல, பிறப்பு எடுக்கும் எல்லா ஜீவன்களுக்கும் இந்தப் பிறப்பு ஒரே ஒரு தடவைதான். இது ஓர் அரிய சந்தர்ப்பம். அடுத்த பிறவி பற்றி ஆராயாமல், தற்போது வாழும் காலத்தில் செய்ய வேண்டிய, நல்ல கருமங்களைச் செய்வதே சிறப்பானதாகும்.

இருக்கும் காலத்தில் நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோம் என்பதில் நேரிய தெளவும் உழைப்பும் அவசியமானது.

ஒவ்வொரு பொழுதுகளும் கடந்த வண்ணமிருக்கின்றது. எனவே போன பொழுது மீண்டும் எழுவதில்லை. அவதானமாக அறிவுடன் இயங்குவதே ஆக்கபூர்வமானதாகும்.

நாளைக்கு எனச் சொல்வதை நிறுத்துங்கள். ஆனால், எல்லா வேலைகளையும் ஒரே நாளில் செய்ய முடியாது. செய்யும் கருமங்களை அட்டவணைப்படுத்துக!

முறைப்படி கருமம் ஆற்றுவதற்கு, அவை பற்றிய அறிதலுடன், தெரியாதவற்றைக் கேட்டு உணர்ந்து செய்தால், காரிய சித்தி உண்டாகும்.

சில தடவைகள் எதிபாராத துன்பங்கள் நடப்பதும் இயற்கை. ஆனால், அதற்குள் தொடர்ந்து சுழலாமல், இயங்கியே ஆகவேண்டும்.

நமக்கும் குடும்பத்துக்கும் சேமிப்பு அவசியம் தேவை. உலகுக்கான சேவையை மறக்காதீர்கள்!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ராஜபக்‌ஷக்கள் என்ன செய்யப் போகிறார்கள்



என்.கே.அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

(கடந்த வாரத் தொடர்ச்சி)

ராஜபக்‌ஷக்களின் பலமும் அவர்களின் குடும்பம்தான், பலவீனமும் அவர்களின் குடும்பம்தான். ஒரு காலத்தில் அவர்களைப் பொறுத்தமட்டில் அதன் பலம், பலவீனத்தை விஞ்சி நின்றது, ஆனால் காலம் செல்லச் செல்ல, குறிப்பாக 2012-ன் பின்னர் பலவீனம், பலத்தை விஞ்சி நிற்கிறது என்று சொன்னால் அது பொய்யல்ல. ஆனால் ராஜபக்‌ஷ என்ற பெயருக்கு, குறிப்பாக மஹிந்த ராஜபக்‌ஷவுக்கு, “சிங்கள-பௌத்த” வாக்கு வங்கியிடம் இன்னும் செல்வாக்கு இருக்கிறது.

2018-ல், 52-நாள் அரசியலமைப்பு விரோத சதி, ராஜபக்‌ஷக்களின், குறிப்பாக மஹிந்த ராஜபக்‌ஷவின் பெயர் சிதைந்து போனாலும், அது ராஜபக்ஷ ஆதரவுத்தளத்தை முற்றாக தகர்த்துவிடவில்லை. வெறித்தனமான ராஜபக்‌ஷ ஆதரவாளர்கள், 52-நாள் சதியிலிருந்து நாடு காப்பாற்றப்பட்டதைத்தான் ராஜபக்‌ஷக்களுக்கு எதிரானதும், தமக்கு எதிரானதுமான சதியாகப் பார்த்தார்கள். ஆனால் இந்த வெறித்தனமான ராஜபக்‌ஷ ஆதரவு வாக்கு வங்கி, ஜனாதிபதித் தேர்தலுக்கு உதவாது.

2009 யுத்த நிறைவுடன், “சிங்கள-பௌத்த” பேரினவாதத்தின் ஒப்புயர்விலாத் தலைவனாக இருந்த மஹிந்த ராஜபக்‌ஷவின் நிலை, 2015-ன் பின்னர் கூட தகரவில்லை, ஆனால் 2018-ல் 52-நாள் அரசியலமைப்பு விரோத சதி, மஹிந்தவின் ஆதரவாளர் அல்லாத, “சிங்கள-பௌத்த” பேரினவாதிகளுக்கு இன்னொரு தலைமைக்கான அவசியத்தையும், வெற்றிடத்தையும் உணர்த்தியது. ஆனால் அது ராஜபக்‌ஷ அல்லாத ஒருவராக இருந்தால், வெறித்தனமான ராஜபக்‌ஷ ஆதரவாளர்கள் எனும் வாக்கு வங்கியின் ஆதரவு கிடைக்காது. அது “சிங்கள-பௌத்த” பேரினவாத வாக்கு வங்கியை உடைப்பதாக அமையும். மேலும், “சிங்கள-பௌத்த” வாக்கு வங்கியிலும், ஊசலாடும் வாக்குகள் நிறையவே உண்டு, அவற்றையும் கையப்படுத்தினால்தான் பெரியதொரு வெற்றியை அடையலாம் என்பது அவர்களின் சிந்தனையாக இருந்திருக்க வேண்டும். இந்த இடத்தில்தான், அந்த வெற்றிடத்தை நிரப்ப கோட்டாபய ராஜபக்‌ஷ என்ற அரசியல் முன்னனுபவம் அற்ற, “ஹிட்லரைப்” போன்ற பெரும் சர்வாதிகாரியென்ற பிம்பம் கட்டியெழுப்பப்பட்ட நபரை இந்த மஹிந்த ராஜபக்‌ஷ அல்லாத குழுவும், ஊடக வணிக வியாபாரிகளும், ஆயுத வணிகர்களும், அவர்களின் ஆதரவில் இயங்கிய படித்துப்பட்டம் பெற்ற தொழில் நிபுணர்களான “சிங்கள-பௌத்த” பேரினவாதிகளைக் கொண்ட “வியத்மக” என்ற அமைப்பும் “சிங்கள-பௌத்த” பேரினவாதத்தின் அடுத்த தலைமைப் பதவிக்கு முன்னிறுத்தத் தொடங்கின.

52-நாள் அரசியலமைப்பு விரோத சதி தோற்கடிக்கப்பட்ட பின்னர், மஹிந்த மீண்டும் பழையபடி அமைதியாகினார். மஹிந்தவின் அமைதியை மேற்சொன்ன குழு, தமது நிகழ்ச்சிநிரலை முற்கொண்டு செல்லப் பயன்படுத்தியது. மஹிந்த கோட்டாபயவை ஜனாதிபதியாக்க முனைந்தார் என்று சொல்வதற்கில்லை. ஏனென்றால், கோட்டாவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு, பெரும் களிப்பேதுமில்லாத முகத்துடன், கோட்டாவை ஜனாதிபதி வேட்பாளராக்கும் வரை, கோட்டா பற்றியோ, கோட்டாவை ஜனாதிபதி வேட்பாளராக்குவது பற்றியோ மஹிந்த எதுவித முன்னெடுப்புக்களையும் செய்யவில்லை. மஹிந்தவிடம் வேறு திட்டங்கள் இருந்திருக்கலாம். மேற்சொன்ன குழுவின் அழுத்தத்தின்பேரில் கோட்டாவை ஜனாதிபதியாக்குவது என்பது, மஹிந்தவைப் பொறுத்தவரையில் குடும்பம், மற்றும் கட்சிக்குள் தனக்கிருந்த செல்வாக்கை தானே குழிதோண்டிப்புதைப்பதற்குச் சமன்.

மேலும் கோட்டாவுக்கு அரசியல் அனுபவம் கிடையாது. தலைமைத்துவப் பண்பு சுத்தமாகக் கிடையாது. ஆனால் தான் என்ற அகம்பாவமும், முட்டாள்தனமான முடிவை எடுத்தபின், அதன் பாதிப்புக்களைப் பார்த்தபின் கூட, தான் என்ற மமதையின் விளைவால் அதனை மாற்றிக்கொள்ளாத ஆபத்தான் குணமெல்லாம் கோட்டாவுக்கு இருக்கிறது என்பதை கோட்டா ஜனாதிபதியாகிய பின்னர்தான் மக்கள் தெரிந்துகொண்டார்கள். அது கோட்டாவின் அண்ணாவான மஹிந்தவிற்கு முதலே தெரிந்திருக்கலாம். அதனால் ஜனவரி முதல் ஏப்ரல் 2019 வரை மஹிந்த அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் கழுவும் நீரில் நழுவும் மீனாகத்தான் இருந்தார். ஆனால் மேற்சொன்ன குழுவினர், கோட்டாவை நேரடியாகவும், மறைமுகமாகவும் முன்னிறுத்தும் கைங்கரியத்தை ஊடகங்கள் வாயிலாகவும், கூட்டங்கள் மூலமும் நடத்திக்கொண்டுதான் இருந்தனர். இந்த சந்தர்ப்பத்தில்தான், இலங்கையர்கள் மட்டுமல்லாது முழு உலகமுமே அதிர்ந்துபோன “உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள்” இலங்கையை ஆட்டிப்போட்டது.

தென்னிலங்கையர்களுக்கு இது “யுத்த கால” ஞாபங்களை ஏறத்தாழ 10 வருடங்களின் பின்னர் மீட்டுக்காட்டியது. இதனால் கதிகலங்கிப்போன “சிங்கள-பௌத்த” வாக்கு வங்கி, “ஹிட்லரைப்” போன்ற ராஜபக்‌ஷதான் தமக்குச் சரியான தலைமையென்று எண்ணத் தொடங்கியது. அந்த எண்ணத்தை உடனடியாக அறுவடை செய்யும் வகையில் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய ராஜபக்‌ஷ அறிவிக்கப்பட்டார். அந்த அறிவுப்பு சந்தர்ப்பம் சார்ந்தது. மஹிந்தவிற்கு கோட்டா ஜனாதிபதியாவதில் முழு மகிழ்ச்சி இல்லாமல் இருக்கலாம். ஆனால் ராஜபக்‌ஷக்கள் அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றுவதற்கு அன்று இருந்த ஒரே பலமான வழி அதுதான். ஆகவே அந்த சமரசத்தை மஹிந்த, பசில், நாமல் என அனைத்து ராஜபக்‌ஷக்களும் ஏற்றிருக்கலாம். அந்த முடிவின் பிரதிபலன் இரண்டு வருடங்களில் கிடைத்தபோது, முதல் அடிகளை வாங்கியவர்களும் பசிலும், நாமலும், மஹிந்தவும்தான்.

ராஜபக்‌ஷக்கள் மீது கொலைகாரர்கள், மக்கள் பணத்தை சுரண்டியவர்கள், இன அழிப்பாளர்கள் என்று ஆயிரம் குற்றச்சாட்டுக்கள் இருக்கிறது. ஆனால் ராஜபக்‌ஷக்கள் செயல் வீரர்கள், எதற்கும் அஞ்சாதவர்கள் என்பதுதான் அவர்கள் ஆதரவாளர்களுக்கு இருந்த ஒரே பலமான பதில் பேச்சு. அதுவும் பொய், ராஜபக்‌ஷக்கள் மிகப் பெரிய “ஃபெய்லியர்” என்பதை தனது அடி முட்டாள்தனமான முடிவுகளாலும், மக்கள் ஆர்ப்பாட்டத்திற்கு பயந்த நாடுவிட்டு தப்பித்து ஓடிய தனது நடவடிக்கையினாலும் கோட்டாபய நிரூபித்துவிட்டார். இன்று ராஜபக்‌ஷக்கள் மீண்டும் கீழானதொரு நிலையில் நின்று கொண்டு அடுத்தது என்ன செய்வது என்று சதியாலோசனை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ராஜபக்‌ஷக்களின் பலம் ஒன்றுதான். அது இனவாதம். “சிங்கள-பௌத்த” பேரினவாதம்தான் ராஜபக்‌ஷக்களின் அரசியல் மூலதனம். ஆனால் ராஜபக்‌ஷக்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற இனவாதத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்ற தெளிவு “சிங்கள-பௌத்த” வாக்கு வங்கியின் ஒரு சிறிதளவினருக்கு இன்று ஏற்பட்டிருக்கிறது. மேலும், ராஜபக்‌ஷக்களால் வீழ்ந்துள்ள இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பு முடியும் என்று பெரும்பான்மை வங்கி, இன்றைய பொழுதில் நம்பவில்லை. இதைவிடவும், ராஜபக்‌ஷக்களோடு கூட இருந்தவர்கள் பலரும், கவிழும் கப்பலாக ராஜபக்‌ஷக்களை கருதி, அதிலிருந்து பாய்ந்து தனி வழி பயணத்தை தொடங்கிவிட்டார்கள், இன்னும் பலரும் அந்த வழியில் தொடர்வார்கள் என்பது யதார்த்தம்.

ஆகவே மீண்டும் தனித்த ராஜபக்‌ஷ ஆட்சியென்பது குறுங்காலத்தில் சாத்தியமில்லை என்பது ராஜபக்‌ஷக்களுக்கு தெரியும். ஆகவே ராஜபக்‌ஷக்கள் குறுங்காலத்தைவிட, நீண்டகாலத்தைப் பற்றி யோசிப்பதுதான் அவர்களுக்கு உசிதமானது. ஆனால் இயற்கை மஹிந்தவிற்கும், சமலுக்கும் அவ்வளவு காலத்தை வழங்குமா என்பது முதல் கேள்வி. மஹிந்த உள்ளவரைதான் நாமலுக்கான இன்றைய இடம். மஹிந்தவிற்குப் பிறகு, ராஜபக்‌ஷக்களே நாமலுக்கு இன்று அவர்கள் வழங்கியுள்ள இடத்தை வழங்குவார்களா என்பது கேள்விக்குறி. இதே நிலைதான் மஹிந்தவின் மற்றைய இரண்டு புதல்வர்களுக்கும். சமீந்திர ராஜபக்‌ஷ இதுவரை காலமும் அமைதியாக தன்னுடைய அரசியலை தனிவழியில் நடத்திக்கொண்டிருக்கிறார். ஒருவேளை காலம் அரசியலின் முன்னணிக்கு அழைத்து வரக்கூடும். ஆனால் இவர்கள் எல்லாரையும் விட, அரசியல் ஆசையோடும், கனவோடும் இருப்பது பசில்தான். ஆனால் பசிலின் ஜனாதிபதிக் கனவு என்பது சாத்தியமற்றது என்பது பசிலுக்குப் புரியவில்லை. கோட்டாவைக் கொண்டு வந்தே சூடுகண்ட மக்கள், பசிலை நினைத்துக் கூடப்பார்க்க மாட்டார்கள் என்பது யூகிக்கக் கூடியதே! இந்த இடத்தில் கோட்டாவை மீண்டும் கொண்டு வர, அவரை முதலில் கொண்டு வந்த அதே கூட்டம் முயல்வதாகவும் செவிவழிச்செய்திகள் சொல்கின்றன. ஆனால் அதற்கான வாய்ப்புக்களும் அரிதே.

ராஜபக்‌ஷக்கள் இனி என்ன செய்யப் போகிறார்கள் என்ற கேள்விக்கு, ஒரு பதிலை உறுதியாகச் சொல்லலாம். அவர்கள் எப்படி மீண்டும் தான் அதிகாரத்திற்கு வருவது என்பதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் என்ன, தற்போது ராஜபக்‌ஷக்கள் முன்னரிருந்தளவிற்கு ஒற்றுமையாக இல்லை. அவர்களது பலம், அவர்களிடம் இல்லை. அதுவும் நல்லதுதான்.

## கடிதங்கள்

### முற்றுப்புள்ளி வையுங்கள்

மலையகத்தில் தொடர்ச்சியாக இடம்பெறும் குளவி தாக்குதலுக்கு முற்றுபுள்ளி வையுங்கள் இல்லையென்றால் பல உயிர்களை காவு கொண்டு விடுமென பலரும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மலையகத்தில் அனேகமாக குளவித் தாக்குதல் இடம்பெறுவதோடு அவ்வப்போது சில உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. இதற்கு தோட்ட நிர்வாகங்களே முழுமையான காரணமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளனர். ஆரம்பக் காலங்களில் தோட்ட நிர்வாகங்கள் அதிகாலை குளவி கூடுகளை அப்புறப்படுத்திய பின்னரே தொழிலாளர்களை பணிக்கு அனுப்புவர். ஆனால் அந்த முறைமை தற்போது முழுமையாக கைவிடப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரசியல் கட்சிகள் ஒருமித்த குரலாய் தோட்டக் கம்பனிகளிடமும் நிர்வாகத்திடமும் இவ்விடயம் தொடர்பில் முழுமையான அழுத்தத்தை கொடுக்க வேண்டும். குளவி கூடுகளை அப்புறப்படுத்தி தொழிலாளர்களுக்கு வேலை செய்யும் தளத்தில் முழுமையான பாதுகாப்பை வழங்க வேண்டுமென மலையக தொழிலாளர் முன்னணியின் அமைப்பு செயலாளர் லெட்சுமனார் சஞ்சய் குறிப்பிட்டுள்ளார்.

– நீலமேகம் பிரசாந்த்



FAO மற்றும் விவசாய அமைச்சு புரிந்துணர்வு

# உடன்படிக்கை கைச்சாத்து

இலங்கையில் மோசமாகப் பாதிக்கப்பட்ட நெற்செய்கையாளர்களிலிருந்து பயனாளிகளைத் தெரிவுசெய்து அவர்களுக்கு உரம் வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் FAO மற்றும் விவசாய அமைச்சு ஆகியன கைச்சாத்திட்டுள்ளன. இலங்கை மற்றும் மாலைதீவுக்கான FAO பிரதிநிதி விம்லேந்திரா ஷரன், விவசாய அமைச்சின் செயலாளர் ரோஹண புஷ்பகுமார ஆகியோர் இந்த உடன்படிக்கையில் கையொப்பமிட்டனர்.

இந்நிகழ்வில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர கலந்து கொண்டார்.

எதிர்வரும் பயிர்ச்செய்கைப் பருவங்களில் உற்பத்தியை மேம்படுத்துவதற்காகவும் இலங்கையில் உணவுப் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காகவும், ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் (FAO), அதன் பங்காளிகளின் உதவியுடன், யூரியா மற்றும் ட்ரிப்பிள் சுப்பர் பொஸ்பேற் (TSP) உர வகைகளைக் கொள்முதல் செய்துள்ளது. அண்மையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம், விவசாய அமைச்சின் ஊடாகப் பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கும் மோசமாகப் பாதிக்கப்பட்ட நெற்செய்கையாளர்களுக்கு அத்தியாவசிய விவசாய உள்ளீடுகளை வழங்குவதற்குமான ஒரு கட்டமைப்பை ஏற்படுத்துகின்றது.

# செலான் Accelerate கணக்குதாரர்களுக்கு விலைக்கழிவுகள்

செலான் வங்கி, இலங்கையின் சில உயர் கல்வி நிலையங்களுடன் கைகோர்த்து, செலான் Accelerate கணக்குதாரர்களுக்கு விலைக்கழிவுகளை வழங்க முன்வந்துள்ளது.

செலான் Accelerate கணக்குதாரர்களுக்கு அவர்களின் பிரத்தியேக வளர்ச்சி மற்றும் கல்விசார் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு உதவுவது மற்றும் வலுவூட்டும் நோக்குடன், பல்வேறு கல்வி நிலையங்களை இந்தத் திட்டத்தில் செலான் வங்கி உள்வாங்கியுள்ளதுடன், இதனூடாக பரந்தளவு வாடிக்கையாளர்களின் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

அதன் பிரகாரம், ANC கல்வியகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு MSc, LLB மற்றும் LLM கற்கைகளை தொடர்வதற்கு ரூ. 100,000 விலைக்கழிவும், BMS இல் தெரிவு செய்யப்பட்ட கற்கைகளுக்கு 15% வரை விலைக்கழிவையும் பெற்றுக் கொள்ள முடியும். SLIM இல் பதிவுகளின் மீது 10% விலைக்கழிவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். ICBT இல் உள்நாட்டுக் கற்கைகளுக்கு 5% விலைக்கழிவையும், AIC இல் கட்டணத்தில் 20% ஐயும் பெறலாம். CMA இனால் தெரிவு செய்யப்பட்ட கற்கைகளுக்கு ரூ. 15,000 விலைக்கழிவு வழங்கப்படுவதுடன், AOD இல் இணைவுக் கட்டணத்தில் 15% விலைக்கழிவு செலான் Accelerate கணக்குதாரர்களுக்கு வழங்கப்படுகின்றது. 18 மற்றும் 25 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு இந்தக் கல்வியகங்களில் தமது உயர் கல்வியைத் தொடர்வதை உறுதி செய்யும் ஆவணங்களை சமர்ப்பித்து, தமது செலான் Accelerate டெபிட் அட்டையைப் பயன்படுத்தி அவ்வாறான



கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது இந்த சலுகைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

செலான் Accelerate என்பது தனியார் மற்றும் அரச துறைகளைச் சேர்ந்த நிரந்தர சம்பளம், கொடுப்பனவுகள் அல்லது மேலதிக வருமானத்தைப் பெறும் ஊழியர்களுக்கு வலுச்சேர்க்கும் வகையில் அமைந்த விசேட கணக்காகும். பல்வேறு பங்காண்மைகளினூடாக செலான் Accelerate கணக்குதாரர்களுக்கு கல்வி, வாழ்க்கைமுறை மற்றும் பொழுது போக்கு போன்ற தமது முழுமையான உள்ளம்சங்களை அனுபவிப்பதற்கு உதவியாக அமைந்திருக்கும். இளம் சம்பளம் பெறுவோரின் நிதித் தேவைகளை இனங்கண்டு, அவர்களின் உயர் கல்விக்கு உதவும் வகையில், செலான் வங்கியினால் கல்வி அடிப்படையிலான சலுகைகள் தமது வாடிக்கையாளர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பில் செலான் வங்கியின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் உதவி பொது முகாமையாளர் காமிக டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், “எமது Accelerate வாடிக்கையாளர்கள் தேசத்தின் இளைஞர்களை பிரதிபலிக்கின்றனர். தமது வாழ்க்கைத் தரத்தை சிறப்பாக மாற்றியமைப்பது பற்றிய பல்வேறு எதிர்பார்ப்புகளையும் ஈடுபாடுகளையும் கொண்டுள்ளனர். செலான் Accelerate இனால் அவர்களுக்கு தமது நிதி இருப்புகளை சுயாதீனமாக நிர்வகித்துக் கொள்ளும் சுதந்திரம் வழங்கப்படுகின்றது. அவர்களின் வாழ்க்கையில் உயர் கல்வி என்பது மிகவும் முக்கியமான பகுதியாக அமைந்திருப்பதுடன், அவர்களின் கற்கைகளுக்கு உதவுவது என்பது பெரும் சவாலான விடயமாக அமைந்துள்ளது. நாட்டிலுள்ள முன்னணி உயர் கல்வி நிலையங்களில் எமது செலான் Accelerate இளைஞர்களுக்கு பரந்தளவு சலுகைகளை வழங்க நாம் முன்வந்துள்ளோம். அவர்களுக்கு தமது கனவுகளை எதிர்கொள்வதற்கு ஊக்கமளிப்பதாக அமைந்திருக்கும்.” என்றார்.

செலான் Accelerate இனால் பரந்தளவு சம்பள சேமிப்புக் கணக்குகளின் பெருமளவு அனுகூலங்கள் வழங்கப்படுகின்றன. இதில் இலவச ATM பணமீளப் பெறுகைகள், விசேட சலுகைகள் மற்றும் கொடுப்பனவுகளுடன் Premier, Prime, Plus மற்றும் Entry அங்கத்துவ பிரிவுகள், திருமணம், குழந்தை பிறப்பு, 21ஆவது பிறந்த தினம் மற்றும் வாழ்க்கையின் பல முக்கிய தருணங்களுக்கு ரூ. 200,000 வரை பண வெகுமதிகள் போன்றன அடங்கியுள்ளன. தமது பிரத்தியேக அல்லது நிபுணத்துவ இலக்குகளை அடைய எதிர்பார்க்கும் எவரும், செலான் Accelerate இல் சிறிய மாதாந்த பங்களிப்புடன் தமது பயணத்தை ஆரம்பிக்கலாம். 2 முதல் 10 வருடங்கள் வரையான காலப்பகுதியில் குறிப்பிட்ட மாதாந்த வைப்புகளை மேற்கொண்டு சேமிப்பு இலக்கை அடைய முடியும்.



# ஒரே நேரத்தில் 15 சித்திரங்கள்

## யுவதிக்கு 'மஹிந்திரா' பாராட்டு



பிரபல தொழிலதிபரான ஆனந்த் மஹிந்திரா, மஹிந்திரா குழுமத்தின் தலைவராவார். இவர் சமூக வலைத்தளமான டுவிட்டரில் மிகவும் ஆர்வத்துடன் இயங்கி வருகின்றார்.


இந்நிலையில் அண்மையில் யுவதியொருவர் ஒரே சமயத்தில் 'ஜான்சி ராணி, சர்தார் வல்லபாய் படேல், காந்தி, சுபாஷ் சந்திர போஸ், அம்பேத்கர் உள்ளிட்ட 15 சுதந்திர போராட்ட தியாகிகளின் படங்களை வரைந்து அசத்திய வீடியோவொன்றினை, ஆனந்த் மஹிந்திரா தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

அத்துடன் “இது எப்படி சாத்தியம்? நிச்சயம் இவர் மிக்க திறமையானவர். ஆனால், ஒரே சமயத்தில் 15 படங்களை வரைந்திருப்பது கலை என்பதையும் தாண்டியும் அதிசயமே, குறித்த யுவதியின் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் இவர் யார் என உறுதிப்படுத்தி சொல்லமுடியுமா? இவரை நாம் ஊக்குவிக்க வேண்டும். இவருக்கு எந்த வகையிலும் உதவ நான் தயார், இவருக்கு ஆதரவு வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைவேன்" என்று பதிவிட்டிருந்தார்.

இந்நிலையில், யுவதி வரைந்த படங்களும் இவரது பதிவும் இணையத்தில் வைரலாகி வருகின்றது.

புதுடெல்லி

## கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள தடை



புதுடெல்லியில் புதிய கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள அரசு தடை விதித்துள்ளது.

புதுடெல்லியில் அதிகரித்து வரும் காற்று மாசு காரணமாக அண்மையில் பட்டாசு வெடிக்க தடை விதிக்கப்பட்டது. அத்துடன் அத்தடையை மீறி வெடித்தால் 200 ரூபாய் அபராதமும், 6 மாதம் சிறை தண்டனையும் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இதனையும் மீறி பலர் பட்டாசுகளை வெடித்து தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடியதால், தீபாவளி நாளில் உலகிலேயே மிகவும் மாசுபட்ட நகரமாக புதுடெல்லி மாறியது.


இந்நிலையில், கடந்த 24 மணி நேரத்தில் புதுடெல்லியின் காற்றின் தரக் குறியீடு அபாயம் என்ற நிலையை எட்டியது.

இதனையடுத்து, காற்று மாசு அதிகரிப்பதை தடுக்க,அரசு தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில் புதுடெல்லியில் புதிய பாராளுமன்றக் கட்டுமானப் பணி(செண்டிரல் விஸ்டா திட்டம்) மற்றும் தேச நலனுக்கான அத்தியாவசிய கட்டிடப் பணிகளைத் தவிர்த்து, பிற கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

உத்திர பிரதேசம்

## ATM தந்த பணத்தால் பரபரப்பு



'ATM' இயந்திரமொன்றில் இருந்து 'சிறுவர்கள் விளையாடும் போலி நாணயத்தாள்கள் வந்த சம்பவம் உத்திர பிரதேசத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

'கிஷன்' என்பவர் உத்திர பிரதேசத்தில் உள்ள ATM இயந்திரமொன்றில் இருந்து 5,000 ரூபாயை எடுத்துள்ளார்.

இந்நிலையில் அதில் `Full of fun` எனக் குறிப்பிடப்பட்ட சிறுவர்கள் விளையாடும் போலி நாணயத்தாள் ஒன்று இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அவர், இது குறித்த வீடியோவொன்றை இணையத்தில் பகிர்ந்துள்ளார்.

”போலி நாணயத்தாளை ATM இயந்திரம் ஏற்றுக்கொண்டமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது போன்ற சம்பவங்கள் பல முறைகள் இடம்பெற்றுள்ளன எனவும், இச்சம்பவத்துக்கு குறித்த வங்கியே பொறுப்பேற்க வேண்டும் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து வங்கி சார்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளா

## முட்டைகளை ஏற்றி வரும் வாகனங்களுக்குத் தடை

கேரள மாநிலம் ஆலப்புழா மாவட்டத்தில் பறவை காய்ச்சலால் 15,000 க்கும் மேற்பட்ட வாத்துகள், கோழிகள் உள்ளிட்ட பறவை இனங்கள் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுளள்து.

இந்நிலையில் கேரளாவின் பல்வேறு இடங்களில் இருந்து தினமும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் கூடலூர் வழியாக ஊட்டிக்கு சென்று திரும்புவதால் தமிழகத்துக்குள் பறவை காய்ச்சல் பரவாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கும்படி நீலகிரி மாவட்ட அதிபர் அம்ரித் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் இதுகுறித்து கால்நடை பராமரிப்புத் துறையும் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அதில் ”கேரளாவில் ஆலப்புழா மாவட்டத்தில் பறவை காய்ச்சல் பரவியுள்ளது. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கூடலூர், பந்தலூர் தாலுகாவுக்குள் வரும் வாகனங்கள் கண்காணிக்கப்பட்டு கிருமிநாசினி தெளிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் கோழிகள், முட்டைகள் ஏற்றி வரும் வாகனங்களும் திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமல்லாது சுல்தான்பத்தேரி உள்ளிட்ட இடங்களில் இருந்து கறிக்கோழிகள் பந்தலூர் தாலுகாவுக்குள் கொண்டு வரத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே வியாபாரிகள், பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் ” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



புனே

## எருமையை பாலியல் வன்கொடுமை செய்தவர் கைது

புனேவில் இயற்கைக்கு மாறாக எருமை மாட்டை பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வயல் வெளியொன்றில் எருமை மாடொன்று புல் மேய்ந்து கொண்டு இருந்துள்ளது. அப்போது வந்தவர் எருமையை மறைவான இடத்திற்கு ஓட்டிச் சென்று, அங்கு வைத்து எருமையுடன் பாலியல் வன்புணர்வில் ஈடுபட்டுள்ளார். அவ்வழியாக வந்த சிலர் அக்காட்சியைப் கண்டு அதிர்ச்சி அடைந்து அந்நபரைப் பிடித்து விசாரித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அந்த நபரிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில் 'அவர் நேபாளத்தைச் சேர்ந்தவர் என்பதும், அவருக்கு 38 வயது என்பதும் தெரியவந்துள்ளது எனத் தெரிவித்த பொலிஸார் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.



இருபதுக்கு – 20 உலகக் கிண்ணம்:

# சிம்பாப்வேயை வென்ற பங்களாதேஷ்

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் இருபதுக்கு- 20 உலகக் கிண்ணத் தொடரில், பிறிஸ்பேணில் நேற்று நடைபெற்ற சிம்பாப்வேயுடனான குழு இரண்டு சுப்பர் 12 போட்டியில் பங்களாதேஷ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷின் அணித்தலைவர் ஷகிப் அல் ஹஸன், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், நஜ்முல் ஹொஸைன் ஷன்டோவின் 71 (55), அஃபிஃப் ஹொஸைனின் 29 (19) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், றிச்சர்ட் நகரவா 4-0-24-2, பிளஸிங் முஸர்பனி 2-0-13-2, ஷோன் வில்லியம்ஸ் 2-0-10-1, தென்டாய் சட்டாரா 3-0-18-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 151 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே, 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்று மூன்று ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தி, ஷோன் வில்லியம்ஸ் 64 (42) ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில், தஸ்கின் அஹ்மட் 4-1-19-3, முஸ்தபிசூர் ரஹ்மான் 4-0-15-2 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.




இப்போட்டியின் நாயகனாக தஸ்கின் அஹ்மட் தெரிவானார்.

இந்நிலையில், பேர்த்தில் நடைபெற்ற மற்றைய போட்டியில் நெதர்லாந்தை பாகிஸ்தான் வென்றிருந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நெதர்லாந்து

நெதர்லாந்து: 91/9 (20 ஓவ. ) (பந்துவீச்சு: ஷடாப் கான் 3/22 [4], மொஹமட் வாஸிம் 2/15 [3], நசீம் ஷா 1/11 [4], ஹரிஸ் றாஃப் 1/10 [3], ஷகீன் ஷா அஃப்ரிடி 1/19 [4], மொஹமட் நவாஸ் 0/11 [2])

பாகிஸ்தான்: 95/4 (13.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: மொஹமட் றிஸ்வான் 49 (39) ஓட்டங்கள். பந்துவீச்சு: போல் வான் மீக்கரன் 1/19 [4], லோகன் வான் பீக் 0/9 [2], றொலெஃப் வான் டர் மேர்வி 0/7 [1])

போட்டியின் நாயகன்: ஷடாப் கான்

இந்நிலையில், பிறிஸ்பேணில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு ஒன்று சுப்பர் 12 போட்டியில் அயர்லாந்தை அவுஸ்திரேலியா எதிர்கொள்கிறது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# செல்சி, லிவர்பூல் தோற்றன

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியனின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-4 என்ற கோல் கணக்கில் செல்சி தோற்றது.

இதேவேளை, தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற லீட்ஸ் யுனைட்டெட்டுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் தோற்றது.

இந்நிலையில், புல்ஹாமின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணிக்கும், எவெர்ற்றனுக்குமிடையிலான போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.




இதேவேளை, லெய்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி வென்றது.

சர்வதேச கனவை நோக்கி நகரும் பளு தூக்கும் இளைஞன்:

# மீண்டும் தேசிய ரீதியில் சாதனை

எஸ். நிதர்ஷன்

தேசிய ரீதியான பளு தூக்கல் போட்டியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞர் புதிய சாதனைகளைப் படைத்துள்ளார்.

கொழும்பு தனியார் விடுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய ரீதியிலான போட்டியில் 25 மாவட்டங்களையும் சேர்ந்த 56 க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

இப்போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து ஒரே ஒருவராக யாழ்ப்பாணம் தென்மராட்சி பகுதியைச் சேர்ந்த சற்குணராசா புசாந்தன் கலந்து கொண்டு மூன்று பிரிவுகளில் நடைபெற்ற போட்டியில் மூன்றிலும் வென்று, மூன்று தங்கப் பதக்கங்களைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

120 கிலோ கிராமுக்கு மேற்பட்டோருக்கான பிரிவில் கலந்து கொண்ட இவர், squat பிரிவில் 335 கிலோ கிராமையும், benchpress பிரிவில் 183 கிலோ கிராமையும், deadlift பிரிவில் 275 கிலோ கிராமையும் தூக்கி வெற்றி பெற்றுள்ளார்.



இதில், squat, deadlift, benchpress ஆகிய மூன்று பிரிவுகளிலும் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

அத்துடன் குறித்த போட்டியில் மொத்தமாக 793 கிலோ கிராமை தூக்கி புதிய சாதனையையும் நிலை நாட்டியுள்ளார்.

அத்துடன் சற்குணராசா புசாந்தன் வருகின்ற டிசெம்பர் மாதம் நியூசிலாந்தில் நடைபெறுகின்றன சர்வதேச பளுதூக்கல் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக சற்குணராசா புசாந்தனின் பயிற்றுவிப்பாளர் அரியகுணரசா ஜெயகிருஷ்ணா தெரிவித்ததுடன் சற்குணராசா புசாந்தன் சர்வதேச ரீதியிலும் புதிய சாதனையை படைப்பார் என நம்பிக்கை தெரிவித்தார்.

பிலிப்பைன்ஸ்




# 50 பேரின் உயிரை பறித்த கனமழை

பிலிப்பைன்ஸில் அண்மைக் காலமாகப் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 50-ஆக அதிகரித்துள்ளது.

மேலும் 16 பேர் காணாமற் போயுள்ளனர் எனவும், அவர்களைத் தேடும் பணியில் மீட்புப் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ் இயற்கை அனர்த்தங்களால் ஏராளமான மக்கள் தமது வீடுகள் மற்றும் உடைமைகளை இழந்துள்ளனர் எனவும், அவர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேஸில்



## எதிர்க்கட்சிக்காரரை துப்பாக்கியுடன் துரத்திய பெண் எம்.பி

பிரேஸிலில், ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தின்போது ஏற்பட்ட வாக்குவாதத்தில், ஆளும் கட்சியைச் சேர்ந்த பெண் எம்.பியான ‘ கார்லா ஜம்பேலி‘, எதிர்கட்சிக்காரரை துப்பாக்கி முனையில் விரட்டிச் சென்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தேர்தல் நடைபெறுவதற்கு 24 மணி நேரங்கள் முன்னர், துப்பாக்கிகளை எடுத்துச்செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில், தெரிந்தே தடையை மீறியதாக, செய்தியாளர்களிடம் ஜம்பேலி தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சீனா

## மகளைக் கடித்த நண்டை உயிருடன் விழுங்கிய தந்தை

நபர் ஒருவர், தனது மகளைக் கடித்த நண்டை உயிருடன் விழுங்கிய விநோத சம்பவம் சீனாவில் இடம்பெற்றுள்ளது.

சீனாவின் ஜெஜியாங் நகரை சேர்ந்தவர் லூா. 39 வயதான இவர், அண்மையில் தனது வீட்டுக்கு உயிருடன் உள்ள நண்டுகளை வாங்கி வந்துள்ளார். அப்போது, ஒரு நண்டு அவரது மகளை கடித்துள்ளது.

இதனை எதிர்பாராத அவரது மகள் வலி தாங்க முடியாமல் அலறியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த லூா, தனது மகளைக் கடித்த நண்டைப் பிடித்து உயிருடனேயே கடித்து விழுங்கியுள்ளார்.

இந்நிலையில், சில நாட்களின் பின்னர் லூா கடுமையான முதுகு



வலியினால் அவதிப்பட்டு வந்துள்ளார்.

இதனையடுத்து வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார். அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் ""அவருடைய ஜீரண பகுதி பாதிக்கப்பட்டு இருப்பதைக் கண்டுபிடித்தனர்.

இதற்கு காரணம் தெரியாமல் வைத்தியர்கள் குழம்பிக்கொண்டிருந்த நிலையில், லூா உயிருடன் நண்டு சாப்பிட்டதை அவருடைய மனைவி மருத்துவர்களிடம் கூறினார்.

பென்சில்வேனியா

## உலகின் அதிவேகமான ‘ஷூ‘

பென்சில்வேனியாவில் இயங்கிவரும் ஸ்டார்ட்அப் ஷிப்ட் ரோபோட்டிக்ஸ் என்ற நிறுவனமானது ‘மூன் வாக்கர்ஸ்(Moonwalkers) என்ற காலணிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

இது மற்ற காலணிகளை போன்று சாதாரண காலணிகள் அல்ல எனவும் . இது நடையின் வேகத்தை 250% அதிகரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது இக்காலணிகள், சக்கரங்கள் அமைப்பை கொண்டது எனவும் இச் சக்கரங்களைக் காலணிகளில் பொருத்திவிட்டு நடக்கும் போது அவை நமது வேகத்திற்கு ஏற்ப செயல்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதில் பொருத்தப்பட்டுள்ள சென்சார்கள், கால்களின் வேகத்தை கணித்து கொண்டு அதற்கேற்ற சீரான வேகத்தை அளிக்கும் எனவும் அதிகபட்சமாக இந்த மூன்வாக்கர்ஸை பயன்படுத்தி நடக்கும் போது சராசரி வேகத்தை விட 250% அதிகமாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா



## எலோன் எடுத்த அதிரடி முடிவு

### அதிர்ச்சியில் டுவிட்டர் ஊழியர்கள்

உலக பணக்காரர்களின் வரிசையில் முதல் இடத்தில் உள்ளவரும், டெஸ்லா ,ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகருமான எலோன் மஸ்க் (Elon musk), பிரபல சமூக வலைத்தளமான டுவிட்டரை அண்மையில் கைப்பற்றினார்.

இந்நிலையில் ”டுவிட்டரின் முன்னணி அதிகாரிகள் தன்னையும் டுவிட்டரையும் தவறாக வழிநடத்துவதாகத்” தெரிவித்த எலோன் மஸ்க், அதிரடியாக டுவிட்டரின் தலைமை செயற்பாட்டு அதிகாரி- பராக் அகர்வால், தலைமை நிதி அதிகாரி- நெட் செகல், தலைமை கொள்கை அதிகாரி- விஜயா கடே ஆகியோரை பணி நீக்கம் செய்துள்ளார்.


அத்துடன் மேலும் 7,500 டுவிட்டர் ஊழியர்கள் விரைவில் பணிநீக்கம் செய்யப்படவுள்ளனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் “ அதிக பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் டுவிட்டரை வாங்கவில்லை எனவும், இதன் மூலம் நான் அன்பு செய்யும் மனிதர்களுக்கு உதவ நினைக்கிறேன்" எனவும் மஸ்க் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் முதல் கட்டமாக சில அடிப்படை மாற்றங்களை செய்ய விரும்புவதாகவும், ட்விட்டரில் இருக்கும் “ஸ்பேம் களை (spam) நீக்க விரும்புவதாகவும் எலோன் கூறியுள்ளார்.

அத்துடன், வெறுப்புப் பேச்சு மற்றும் பிரிவினை நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்காதவகையிலும் டுவிட்டரை மேம்படுத்தவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா



## செய்யாத குற்றத்திற்காக 38 ஆண்டுகள் சிறை

அமெரிக்காவில் 38 ஆண்டுகளாகச் செய்யாத குற்றத்திற்காகத் தண்டனை அனுபவித்து வந்த நபரொருவர், 38 ஆண்டுகள் கழித்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 1983 ஆம் ஆண்டு ஒரு கொலை மற்றும் இரண்டு கொலை முயற்சிகளுக்காகக் கைது செய்யப்பட்ட ‘Maurice Hastings‘ என்ற நபரே, இவ்வாறு தனது 69 ஆவது வயதில் மரபணு பரிசோதனை மூலம் நிரபராதி என விடுவிக்கப்பட்டுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 31 ஒக்டோபர் 2022, இல. 8, ஹுனுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.